விலை ரூபா: 20.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 24 ஞாயிற்றுக்கிழமை (09.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 265

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வெளியாகிய பெறுபேறுகளின்படி
# கிழக்கில் கூட்டமைப்பு முன்னிலை!



நேற்று நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் கிழக்கு மாகாண சபையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால் மூல வாக்குகளின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னிலையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் முதற்கொண்டு கிடைத்த பெறுபேறுகளின் அடிப்படையில் 6 தொகுதிகளில் 5 தொகுதிகளை கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண சபைத் தேர்தல் 50 வீதமானோர் வாக்களிப்பு

### வன்முறைகளும் பதிவாகின

(மட்டக்களப்பு)

நேற்று நடைபெற்ற மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் சுமார் 50 சதவீதமானோர் வாக்களித்துள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில் 43 முதல் 46 சதவீத வாக்களிப்பே இடம்பெற்றுள்ளதாக அத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் 60 சதவீதமும், மட்டக் களப்பில் 63 சதவீதமும் திருகோண மலையில் 62.77 சதவீதமும் வாக்களிப்பு இடம்பெற்றதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் கடந்த 2008ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலின்போது 62.12 சதவீத வாக்களிப்பு இடம்பெற்றதுடன் இரண்டு லட்சத்து 42ஆயிரத்து 463 பேர் வாக்களித்திருந்தனர்.

இவ்வாண்டில் 62.77 சதவீத வாக்களிப்பு இடம்பெற்றுள்ள நிலையில் 2 இலட்சத்து 45 ஆயிரத்து 362 பேர் வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றைய தேர்தலை முன்னிட்டு இடம்பெற்ற 117 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாக் தேர்தல் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவு தெரிவித்தது.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் அதிகமானவை இரத்தினபுரி மாவட்டத்திலிருந்தே பதிவாகியுள்ளதாக குறிப்பிட்ட மேற்படி விசாரணைப்பிரிவு, அநுராதபுரத்தில் - 17, பொலனறுவையின்-16, திருகோணமலையில்-12, மட்டக்களப்பில்-14, அம்பாறையில்-19, கேகாலையில்-13 மற்றும் இரத்தினபுரியில்-26 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாக கூறியுள்ளது.

இதேவேளை (1?ஆம் பக்கம் பார்க்க)

## சிறு முறைப்பாடுகள்;இருவர் கைது
### பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

3 மாகாண சபைகளுக்குமான தேர்தல் முடிபடைந்துள்ள நிலையில் 10 தேர்தல் வன்முறைச் சம்பபவங்கள் பதிவாகியதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இருப்பினும் பாரதூரமான சம்பவங்கள் எதுவும் இல்லை எனவும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அதன்படி வாக்களிப்பு நிலையத்திற்கு முன்பாக துண்டுப்பிரசுரம் வெளியிடல், விருப்பு இலக்கத்தை பார்வைக்கு வைத்தல் உள்ளிட்டவை குறித்தே முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாக தெரிவித்தார். அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் தேர்தலில் இருந்து விலகியுள்ளதாக தெரிவித்து சிலரால் போஸ்டர்கள் ஒட்டப்படதாகவும், எனினும் பொதுவாக நோக்குமிடத்து தேர்தல் அமைதியான முறையில் இடம்பெற்றதாக ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தல் சட்டங்களை மீறியோர் என்ற வகையில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-11)

## ஆயுதங்களுடன் வர்த்தக அமைச்சர்?



(கொழும்பு)

வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தலைமையிலான 20 பேர் அடங்கிய குழுவொன்று ஆயுதங்களுடன் பொலநறுவை, மெதிரிகிரிய ஆகிய இடங்களில் உள்ள வாக்குச் சாவடிகளை அண்மித்த பகுதிகளில் சுற்றித் திரிந்ததாக முறையிடப்பட்டுள்ளது.

பொலநறுவை மாவட்டத்தின் பல பகுதிகளில் வாக்குச் சாவடிகளை அண்மித்த பகுதிகளில் ஜனாதிபதியின் உருவப்படம் பொறிக்கப்பட்ட சுவர் ஒட்டிகள், பதாகைகள் தேர்தல் தினத்தன்றும் நீக்கப்படாமல் இருந்ததுடன், அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் ஆயுதங்கள் தாங்கிய (19ஆம் பக்கம் பார்க்க)

## புகையிரதம் மோதி குடும்பஸ்தர் பலி

வவுனியா வைரவப் புளியங்குளம் பகுதியில் நேற்று சனிக்கிழமை இரவு 9 மணியளவில் புகையிரதத்துடன் மோதுண்டு ஒருவர் பலியாகியுள்ளார்.

புகையிரத பாதையின் அருகில் வசித்து வரும் கணேசராசா(வயது 40) என்பவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

ஓமந்தை புகையிரத நிலையத்தில் இருந்து இரவு தபால் புகையிரதம் வவுனியா நிலையத்தை நோக்கி செல்லும்போதே இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த செவ்வாய்க்கிழமையும் வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகில் புகையிரதத்துடன் மோதுண்டு ஒருவர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## 146 பேர் திருமலையில் கைது

(திருகோணமலை)

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 146 பேரை திருகோணமலை கிழக்கு கடற்பரப்பில் வைத்து கைது செய்ததாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 23 சிறுவர்கள் உள்ளடங்குவதாக கடற் படையின் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள், திருகோணமலை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டு இரகசிய பொலிஸாரிடம் விசாரணைக்காக ஒப்படைத்தாக அவர் கூறினார். (எ-11)

## ஜனாதிபதிக்கு எதிரான வழக்குத் தள்ளுபடி

(வாஷிங்டன்)

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கை அமெரிக்க நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் தளபதி ரமேஸின் மனைவி வத்சலாதேவியினால் ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதிக்கு இராஜதந்திர வரப்பிரசாதங்கள் காணப்படுவதாகவும் இதனால் வழக்குத் தொடர முடியாது எனவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

ரமேஸின் மனைவி வத்சலாதேவி கடந்த ஓகஸ்ட் மாதம் 23-ம் திகதி அமெரிக்க நியூயோர்க் மாவட்ட நீதிமன்றில் ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

ராஜதந்திர (19ஆம் பக்கம் பார்க்க)

CMB-CHENNAI-CMB - 18200/=
CMB-TIRUCHI-CMB- 18300/=
CMB-BONGKOK-CMB - 28500/=
CMB-LONDON-CMB - 74500/=
Call 0773629518
AIR MARK Travels & Tours
IATA



யாழ். நகரில் இந்தியாவில் இருந்து தருவிக்கப்படும் உயர் தரத்திலான கிரனைட் வகைகளை மனம்போல் தெரிவு செய்து பெற்றுக் கொள்வதுடன் அவற்றிற்கான Cutting, Basin Cutting, Laying, Nosing போன்ற சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.



Ranjanas CERAMIC
metro engineering (pvt)ltd.
# 212, Palaly Road, Jaffna. 021 222 0033 / 021 222 0044
# 05, Stanley Road, Jaffna. 021 222 4777 / 021 222 4888
#05A, Kodikamam Road, Nelliyadi. 021 226 2000 /021 226 3111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உடனடி வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் புதிதாக திறந்துள்ள எமது 04 ஆவது கிளை நிறுவனமான One World Innovage Companyக்கு பின்வருவோர் தேவைப்படுகின்றனர். Distributor,Supervisor,Asst. manager(Admin.Officer)

குறைந்த பட்ச தகைமை க.பொ.த.(சா/த)

ஆறு மாத கால பயிற்சியின் போது 12000-18000 வரை பெற முடியும் பயிற்சி முடியும் பட்சத்தில் 45,000இற்கு மேல் பெறமுடியும்.

உடன் தொடர்பு கொள்ளவும்
077-6057421 , 077-5574795 (C-1008)



# 'EASY ENGLISH'

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம் (334)
விபரங்கள் பெற : 773 212 711


# நகை வியாபாரிகளிடம் பணம் பறிப்பதாக புகார்

கொழும்பு செட்டியார் தெருவைச் சேர்ந்த நகைக்கடை வர்த்தகர்களிடம் கடந்த 5 மாதகாலமாக அநாமதேய தொலைபேசி அழைப்புகள் ஊடாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு பணம் பறிக்கப்பட்டு வருகின்ற சம்பவங்கள் நீடித்து வருகின்றது.

இது தொடர்பில் அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்கம் புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஆதாரங்களுடன் முறைப்பாடு செய்திருப்பதாக சங்கத்தின் உயர்பீட அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

அநாமதேய அழைப்புகளை மேற்கொள்கின்ற நபர்கள் தம்மை பொலிஸ் உயர் அதிகாரிகள் என அடையாளம் காட்டிக்கொண்டே இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்து பணம் பறிப்பதாகவும் இதனால் செட்டியார் தெருவைச் சேர்ந்த நகை வியாபாரிகள் அச்சத்துக்கு மத்தியில் செய்வதறியாது இருப்பதாகவும் பாதிக்கப் பட்ட வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இதேவேளை தமது அழைப்புகள் தொடர்பில் தகவல் எதுவும் வெளியிடக்கூடாது என தாம் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் அச்சுறுத்தப்பட்டு வருவதாகவும் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (எ-11)


# பணிப்பெண்கள் தேவை

நல்லூர், மானிப்பாய் ஆகிய இடங்களில் உள்ள பாலர் பாடசாலைகளுக்கு பணிப் பெண்கள் தேவை. 10.09.2012 திங்கட் கிழமை அன்று பிற்பகல் 2.00 மணிக்கு சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

தொலைபேசி : 0777009653, 0773627055
140, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (369)



# மகேஸ்வரி நிதியம்

## தென்மராட்சி கிளை அலுவலக திறப்பு விழா

மகேஸ்வரி நிதியமானது தென்மராட்சி மக்களின் நலன் கருதி தனது புதிய கிளை ஒன்றினை சாவகச்சேரியில் திறந்து வைக்கின்றது.

காலம் : 10.09.2012 (திங்கட்கிழமை)
நேரம் : காலை 10.30
இடம் : இல.20, நவீன சந்தை பின்புறம் மேல்மாடி, கண்டி வீதி (தனங்கிளப்பு வீதிக்கு அருகாமை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ மணல் பெறும் பயனாளிகள் இக்காரியாலயத்திலும் பதிவினை மேற்கொள்ள முடியும்.

த. றஜீவ்
செயற்திட்ட இணைப்பாளர்
மகேஸ்வரி நிதியம்.
(C-1005)



வட மாகாண பாடகர்களை ஒன்றிணைக்கும்

# கிருபா லேணர்ஸின்

இசைத்தேர்வு மிக விரைவில் ... (சி-951)

முதல் மூன்று இடங்களைப்பெறும் வெற்றியாளர்களுக்கு தென்னிந்திய பின்னணிப் பாடகர்களுடன் இசைத் தொகுப்பில் பாடுவதற்கான அரிய சந்தர்ப்பம்.

தொடர்புகளுக்கு : 0772702400,0771882837



# செல்லா சினிமா- யாழ்ப்பாணம்

இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு
ஜீவா, பூஜாஹெக்டே, நரேன் நடித்த




10.30, 2.30, 6.30, 9.30 (C-941)



union assurance
Trust in your tomorrow, today.

# பதவி வெற்றிடம்

இலங்கையில் 151 வருடங்களுக்கு மேல் இயங்கி வரும் ஜோன்கீல்ஸ் கோல்டிங் கம்பனியின் உப நிறுவனமான Union Assurance PLC பருத்தித்துறை கிளையில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்காக புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளவுள்ளோம்.

**பதவி வெற்றிடம் 01 (வெற்றிட எண்ணிக்கை 03)**
- காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர் (ADO)

**பதவி வெற்றிடம் 02 (வெற்றிட எண்ணிக்கை 09)**
- தனி நிதி காப்புறுதி ஆலோசகர் (PFA)
- காப்புறுதி நிதி ஆலோசகர் (FA)

**தகைமைகள்**
★ G.C.E(O/L) இல் கணித பாடம் உட்பட 6 பாடங்களில் சித்தி (பதவி வெற்றிடம் 02)
★ G.C.E(A/L) இல் 3 பாடங்கள் சித்தி (பதவி வெற்றிடம் 01)
காப்புறுதித் துறையில் முன் அனுபவம்

குறிப்பு: ★ 2 மாத பயிற்சிக் காலத்தை உடையது.
★ பயிற்சிக் காலத்தில் நீங்கள் இலங்கை காப்புறுதி நிறுவனம் நடாத்தும் பரீட்சையில் சித்தியடைந்தால் பயிற்சிக் கால முடிவில் வேலையில் நிரந்தரமாக்கப்படுவதுடன் SLII தொழில் சான்றிதழ் வழங்கப்படும்.

உங்களது சுயவிபரக் கோவையுடன் (Bio Data) நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்

இடம் : யூனியன் அஸ்யூரன்ஸ்
இல. 357/1, பிரதான வீதி, பருத்தித்துறை.
(வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில்)
காலம் : 10.09.2012 (திங்கட்கிழமை)
நேரம் : காலை 9.30 முதல் பிற்பகல் 2.00 மணிவரை

முகாமையாளர்
யூனியன் அஸ்யூரன்ஸ் PLC
பருத்தித்துறை.
(C-1000)



# மத்திய கிழக்கு நாடுகளுக்கு உடனடி வேலைவாய்ப்பு ஆலோசனை

சவுதி அரேபியா, டோகா, கட்டார் ஆகிய நாடுகளில் பின்வரும் வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்ளலாம்.

- வெல்டிங்
- மேசன்
- எலக்றிசியன்
- தச்சுவேலை
- உதவியாளர்கள்
- துப்புரவு தொழிலாளர்கள்
- பிளம்பர்

ஆகிய தொழில்களுக்கு ஒரு மாதகாலத்தில் போகக் கூடியதாக ஆலோசனைகள் வழங்கப்படும்.

கப்பலில் தொழில் வாய்ப்பினை (Seaman) பெற விரும்புவோர் 6 மாதகால பாடநெறியினை முடித்தபின்பு தொழில்வாய்ப்பினை இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு

## Rainbow Travels

30/2, Third Lane,
Power House Road, Jaffna.
0778980652 / 0212219596
(C-1006)



# குறைந்த கட்டணத்திலான வெளிநாட்டு பொதிகள் சேவைகள்

## அதிரடி விலை குறைப்பு

கனடா, லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ் } 11 கிலோவிற்கு மேல் அனுப்பும் ஒவ்வொரு கிலோவிற்கும் 1000 ரூபா மட்டுமே பெறப்படும்.
1000 X 11 = 11000
இவை 3 நாட்களில் உரியவர் விலாசத்தில் ஒப்படைக்கப்படும்.

ஏழு நாட்களில் பின்வரும் நாடுகளுக்கான சேவை

| | |
|---|---|
| லண்டன் | - 600 |
| சுவிஸ் | - 600 |
| கனடா | - 700 |

தொடர்புகளிற்கு

## Rainbow Travels

குறிப்பு: 7 நாட்களும் திறந்திருக்கும்

30/2, Third Lane,
Power House Road, Jaffna.
TEL :- 021 221 9596
(C-1006)



# Grand Opening

அமெரிக்காவின் ஒன்றிணைந்த எமது நிறுவனத்தின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிய கிளைகள் 25க்கு புதியவர்கள் பயிற்சியளித்து சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பயிற்சியின் போது 8000-15000 வரை பின் நிரந்தர வேலையுடன் 35000/= க்கு மேல் பெற்றுக் கொள்ளலாம்.

தகைமை: O/L, A/L

குறிப்பு: தங்குமிடம், மருத்துவம், சாப்பாடு ஆகியன இலவசம்.

தொடர்புகளுக்கு: 0772995534,0773001962 (381)



# வேலைவாய்ப்பு

யாழ்.நகரிலுள்ள தனியார் கிளினிக்குக்கு பெண் வேலையாட்கள் தேவை.

க.பொ.த.(சா/த)இல் சித்தியெய்திய, யாழ்.நகரிலிருந்து 05 Kmக்குட்பட்ட பிரதேசத்தில் இருக்கும் பெண்கள் தங்களது சுய விபரக் கோவையுடன் இம்மாதம் 10-ம் திகதி (10.09.2012) திங்கட்கிழமை 9 மணிக்கு 514/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு வரவும். (363)



# வீடு விற்பனைக்கு

இளவாலை, சிறுவிளானில் சகல வசதிகளுடன் கூடிய வீடு 4 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0776048879
(35)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை விற்பனையாளர்களை பதிவு செய்யுமாறு வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

கடந்த 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதைச்சட்டத்தை அமுல்படுத்தும் முகமாக இலங்கையிலுள்ள அனைத்து விதை விற்பனையாளர்களும் கண்ணொறுவ (விதை அத்தாட்சிபடுத்தல் சேவை) பணிப்பாளாருடன் 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதைச்சட்டத்தின் பிரிவு 8 இற்கு ஏற்ப தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு திருநெல்வேலி விதை அத்தாட்சி ப்படுத்தல் சேவை பொறுப்பதிகாரி அ.றமணீதரன் கேட்டுள்ளார்.

ஏற்கனவே பதிவை மேற்கொண்டவர்கள் காலாவதி திகதிக்கேற்ப தங்களது பதிவினை மீளப்புதுப்பிக்குமாறு அவர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய விதை நடுகை பொருட்கள் இறக்குமதி செய்தல், வர்த்தக நோக்கங்களுக்காக விதை/நடுகைப்பொருட்களை உற்பத்தி செய்தல், விதை/நடுகைப்பொருட்களை பகிர்ந்தளித்தல், விதையினை பதனிடுதல், பொதியிடுதல்/மீள பொதியிடுதல், விதை விற்பனை முகவர்கள், சில்லறை அல்லது மொத்த விதை வியாபரரிகள், நாற்று மேடையாளர்கள், விதை/நடுகைப்பொருட்கள் விற்பனையாளர்கள், உள்நாட்டு சந்தைக்கு விதை/ நடுகைப் பொருட்களை விநியோகிப்பதுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்கள் முன்பதிவின்றி விதை நடுகைப் பொருட்கள் என்பவற்றை உள்நாட்டு சந்தைக்கு விநியோகிப்பதுடன் தொடர்புடைய ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடுவதானது குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 16 ஐ மீறியதாகவே கருதப்படுவர். அவ்வாறான குற்றத்தை புரிபவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா பணத்திற்கு குறையாத தண்டப்பணத்தையோ அல்லது ஒரு மாதத்திற்கு குறையாத ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனையையோ அல்லது அவ் இரு தண்டனைகளையோ நீதிமன்றத்திற் கூடாக விதிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவை தொடர்பான தகவல்களையும் விண்ணப்பப்படிவங்களையும் தங்களது பகுதி விவசாய போதனாசிரியரிடமோ அல்லது பலாலி வீதி, திருநெல்வேலியிலுள்ள பிராந்திய விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை நிலையத்திலோ அல்லது பணிப்பாளர் விதை அத்தாட்சிப் படுத்தல் தாவர பாதுகாப்பு சேவை, இல 70, கண்ணொறுவ, பேராதனை என்ற விலாசத்திற்கு சுயமுகவரியிடப்பட்டு முத்திரையிடப்பட்ட கடித உறையொன்றை (9X4) அனுப்பி தபால் மூலமாகவும் பதிவிற்கான விண்ணப்பப் படிவங்களையும் தேவையான தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-2-9)

# ஆவணமின்றி மோ.சைக்கிள் செலுத்தியவருக்கு அபராதம்

(க்ரவெட்டி)

நெல்லியடி பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஆவணமின்றி செலுத்திய நபர் ஒருவருக்கு 16 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

நெல்லியடி பிரதேசத்தில் சம்பவதினம் குறித்த நபர் மோட்டார் சைக்கிளை ஆவணமின்றி செலுத்தி சென்றவேளை குறித்த நபரை வழிமறித்து சோதனையிட்ட நெல்லியடி போக்குவரத்து பொலிஸார் குறித்த நபரிடம் ஆவணங்கள் இன்மையால் குறித்த நபருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் 4 குற்றச்சாட்டுக்களான சாரதி அனுமதிப்பத்திரம், இறைவரிப் பத்திரம், மோட்டார் சைக்கிள் பதிவு செய்யப்படாமை, காப்புறுதி பத்திரம் இன்றி செலுத்திய 4 குற்றச்சாட்டுக்களுக்கும் மேற்படி அபராதத்தை செலுத்துமாறு உத்தரவிட்டார். (அ-3-24)

# சந்தேக நபருக்கு ஆட்பிணை

(கரவெட்டி)

கரணவாய் மத்தி பகுதியில் பொது இடத்தில் வைத்து மது அருந்தி குழப்பம் விளைவித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒருவரின் வழக்கு நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் இடம் பெற்றது.

கரணவாய் மத்தி பகுதியில் சம்பவதினம் குறித்த நபர் மதுபோதையில் பொது இடத்தில் குழப்பம் விளைவித்ததாக குற்றம் சாட்டப்பட்டு நெல்லியடி பொலிஸாரால் வழக்குப் பதிவு செய்து நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நிதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் குறித்த நபர் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபர் மன்றில் தான் நிரபராதி என தெரிவித்தார். இதனால் குறித்த நபரை 15 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதித்ததுடன் இவ்வழக்கு மறுதவணைக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ-3-24)

# வாரம் ஒரு தகவல்

## அனுமதி தேவை!

"என்ன சேர் சுவரிலே அடிக்க வேண்டிய அனைத்து ஆணிகளையும் அடித்து முடித்து விட்டீர்களா?"

"அடடே! வாருங்கள் சேர்... என்ன இருந்தாலும் இந்த வீட்டுச் சொந்தக்காரர் நீங்கள்தானே. நான் வாடகைக்கு குடியிருக்கின்றவன். உங்களுடைய அனுமதி வாங்கிக்கொண்டுதான் ஆணி அடித்திருக்க வேண்டும். பக்கத்துப் போர்ஷன்லே தானே இருக்கிறீர்கள். அதனாலே பின்னர் சொல்லிவிடலாம் என்று நினைத்துக் கொண்டு அவசரத்திலே அடித்து விட்டேன்"

"அதனாலே என்ன சேர் பரவாயில்லை. எல்லாம் நன்மைக்கே!"

"ஹி ஹி... நன்றி"

"இந்த ஆணிகள் இருக்கட்டும். பாதங்களிலே ஆணி என்று சொல்கிறார்களே... அது என்ன ஆணி?"

"பாதங்களிலே மட்டும் இல்லை... உள்ளங்கையில் கூட அது உருவாகும். அதற்கு Callosity என்று பெயர் உண்டு. ஒரே இடத்திலே அதிகமான அழுத்தம் அதிக நேரத்திற்கு இருந்தால் ஆணி உருவாவதற்கு அதிகம் வாய்ப்புள்ளது.

டெனிஸ் ஆடுகிறவர்களுக்கு உள்ளங்கையிலே இதுவரும். காலணிகள் சரியான அளவிலே இல்லையென்றாலும் உருவாகும்"

"இதற்கு வைத்தியம் இல்லையா?"

"அறுவைசிகிச்சை செய்யலாம். இருந்தாலும் இது மாதிரி நீண்ட நேர அழுத்தங்கள் இல்லாமல் பார்த்துக் கொள்வது நல்லது"

"உங்களிடம் வந்தால் இது மாதிரி ஏதாவது உபயோகமான விடயங்களை தெரிந்து வைத்துக்கொள்ள முடிகின்றது. அதற்காகவே அடிக்கடி வர வேண்டும் என்று நினைப்பதுண்டு. இப்பொழுது நான் வந்திருப்பது நீங்கள் சுவரிலே அடித்த ஆணி தொடர்பாகக் கேட்பதற்காகத்தான்!"

"புதிதாக ஒரு நாட்காட்டி இவ்வருடம் கிடைத்தது. அதை மாட்டிக் கொள்வதற்காகத்தான் இப்படி செய்து விட்டேன். உங்களிடம் அனுமதி வாங்காதது..."

"இப்பொழுது நான் வந்தது உங்களிடம் அனுமதி வாங்குவதற்காகத்தான்"

"என்ன சொல்கிறீர்கள்?"

"நீங்கள் இந்தப் பக்கமாக சுவரிலே அடித்துள்ள ஆணி எங்களுடைய வீட்டு சுவர் பக்கமாக நீட்டிக்கொண்டு வெளியே வந்துள்ளது. அதிலே நானும் ஒரு நாட்காட்டியை மாட்டிக்கொள்ளலாமா என்று கேட்கத்தான் வந்தேன்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

09.09.2012

(ஆவணி 24, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

அட்டமி காலை 6.32 மணிவரை

மிருகசீரிடம் முன்னிரவு 11.01 மணிவரை

இராகுகாலம் 4.33-6.03 மணிவரை

சுபநேரம் 9.03-10.33 மணிவரை

**மேடம்** தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிப்பை பெருக்க நினைப்பீர்கள், சகோதர ஒற்றுமை பலப்படும், போசன சுகமுண்டு.

**இடபம்** ஆடம்பரப் பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள், உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், குடும்பத்தில் குதூகலம் ஏற்படலாம், நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள்.

**மிதுனம்** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம், சிந்தனை மிகுதியான நாள்.

**கடகம்** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், தூரத்து உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்படலாம், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், அரசியலில் செல்வாக்குண்டு.

**சிங்கம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், பண வரவு திருப்தி தரும், பயணங்கள் கை கூடுவதற்கான அறிகுறி தோன்றும், புதிய பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி** கொள்கைப் பிடிப்போடு செயற்படும் நாள், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்கள் தொடர்பு நன்மையளிக்கும்.

**துலாம்** தடைகள் விலகி தனவரவு ஏற்படும் நாள், தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

**விருச்சிகம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், செலவுகள் அதிகமாகும், உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள், தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**தனுசு** செலவுகள் செய்து மகிழும் நாள், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், உறவினர் சிலரை தேடிச் சென்று சந்திப்பீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**மகரம்** உற்சாகத்தோடு பணி புரியும் நாள், உடல் நலம் சீராகும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், உறவினர்கள் கை கொடுத்து உதவ முன்வருவர், பண வரவு திருப்தி தரும்.

**கும்பம்** மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறும், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**மீனம்** தொழில் ரீதியாக வர வேண்டிய பண வரவுகள் கைக்கு கிடைக்கும், உறவினர் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், வாகன சுகமுண்டு.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 50 | 90 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 60 | 70 |
| தக்காளி | 60 | 40 | 40 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 35 |
| கோவா | 70 | 60 | 60 | 60 |
| கரட் | 100 | 150 | 100 | 120 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 45. | 50 | 45 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 70 | 60 | 70 | 70 |
| பாகற்காய் | 90 | 60 | 50 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 | -- |
| பயற்றங்காய் | 70 | 60 | 60 | 50 |
| லீக்ஸ் | 100 | 110 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 70 | 60 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 10 | 30 | 50 | 30 |
| போஞ்சி | 100 | 80 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 200 | 180 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30 | 25 | 25 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளி நல்லிணக்க வெற்றிக்கிண்ண போட்டி பற்றிக்ஸில் நேற்று கோலாகல ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

முரளி நல்லிணக்க வெற்றிக்கிண்ண 20:20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி நேற்று யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரியில் கோலாகலமாக ஆரம்பமானது.

சர்வதேச கிரிக்கெட் சபை, குட்னஸ் நிதியம், ரெட்டொட்ஸ், மஹேல நிதியம் மற்றும் பிளை எமரஸ் என்பவற்றின் அனுசரணையுடன் தேசிய ரீதியிலான தெரிவு செய்யப்பட்ட 19 வயது பாடசாலை ஆண்கள் அணிகள், 23 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் தெரிவு அணிகள் இந்தக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

அகில இலங்கை ரீதியிலான தெரிவு அணிகளும் மோதவுள்ள இந்த சுற்றுத் தொடரின் போட்டிகள் அனைத்தும் வட மாகாணத்திலேயே நடைபெறவுள்ளன.

இதற்கென மாங்குளம் மகா வித்தியாலயம், வவுனியா மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மைதானங்கள் விசேடமாக தயார் செய்யப்பட்டுள்ளன.

மேலும் இலங்கையில் உள்ள பாடசாலைகள் மற்றும் கழகங்களிலுள்ள இளம் வீரர்களின் கிரிக்கெட் திறனை வளர்த்து அவர்களை தேசிய அணிக்குள் உள்நுழையக் கூடியவர்களாக மாற்றும் நோக்கத்துடன் முரளி நல்லிணக்க கிண்ண 20:20 கிரிக்கெட் தொடர் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த கிண்ணத்திற்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. இந்த ஆரம்ப நிகழ்வில் இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க, அணியின் உபதலைவரும் சகலதுறை ஆட்டக்காரருமான அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் நுவான் குலசேகரா, துடுப்பாட்ட வீரர் தினேஸ் சண்டிமல் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து செல்லப்பட்ட இவர்களை யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இலங்கை அணியின் வீரர்களை பார்ப்பதற்கு மைதானத்தில் கூடியிருந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கிரிக்கெட் இரசிகர்கள் வீரர்களை கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

இதன் பின்னர் போட்டியில் பங்கு பற்றும் அணி வீரர்களுடன் கலந்துரையாடியதோடு ஆட்ட நுணுக்கங்களையும் பகிர்ந்தனர்.

19 வயதுக்குட்பட்ட 12 பாடசாலைகளை சேர்ந்த ஆண்கள் அணிகள், 23 வயதுக்குட்பட்ட மகளிர் அணிகளை சேர்ந்த 8 தெரிவு அணிகள் என்பன பங்குபற்றும் இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆண், பெண் அணிகளுக்கான அரையிறுதி ஆட்டங்கள் 11 ஆம் திகதி இடம்பெறும். அதேவேளை 12 ஆம் திகதி இறுதிப் போட்டிகள் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# வாள்வெட்டு சம்பவங்கள் குறித்து தனிப்பட்ட முறையில் முறையிடலாம்

## யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

இளைஞர் குழுக்களின் வாள்வெட்டுச் சம்பவங்களினால் பாதிக்கப்படுவோர் தன்னிடம் தனிப்பட்ட முறையில் முறைப்பாடு செய்ய முடியும் என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், கடந்த 3 மாதங்களில் மட்டும் யாழிலும் சிறிய, பெரிய வெட்டுச்சம்பவங்கள் தொடர்பாக 500 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இம் முறைப்பாடுகள் தொடர்பாக மீள் பரிசீலனை செய்யப்பட்டு அவற்றில் அதிக வெட்டுச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்.

யாழில் ஒரு சிறிய இளைஞர்கள் குழுக்கள் துணிச்சல் காரணமாக தமது சண்டித்தனங்களை அரங்கேற்றி வருவதாகவும் அவர்கள் ஏனைய சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

இக் கும்பல்களில் 5 பேர் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றனர். இவர்கள் விரைவில் கைதுசெய்யப்பட்டுசட்டத்தின்முன்நிறுத்தப்படுவர்.

இவர்கள் தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப்பெற்றால் அது தொடர்பில் தன்னிடம் தனிப்பட்ட முறையில் தெரிவிக்குமாறும் அவர் தெரிவித்தார். (அ-4)

# வெடிபொருளுடன் குருநகர் வாசிகள் கைது

(யாழ்ப்பாணம்)

குருநகரினை சேர்ந்த இருவர் 11 கிலோகிராம் ரி.என்.டி.வெடிபொருளுடன் கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் கடந்த 6 ஆம் திகதியன்று இடம்பெற்றுள்ளதாகவும் இவர்கள் குறித்த வெடிபொருளை கடத்திக் கொண்டு வரும் போது இராணுவ சோதனைச்சாவடியிலேயே இவர்கள் இருவரும் பிடிபட்டுள்ளனர்.

இராணுவத்தினரால் பிடிக்கப்பட்ட இருவரும் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறித்த வெடிபொருள் மீன்பிடிப்பதற்காக பயன்படுத்துவதற்கு கொண்டு வரப்பட்டது எனவும் பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். (அ-4)

# நிர்வாகத்தெரிவு

செஞ்சிலுவைச் சங்க நல்லூர் பிரிவின் புனரமைப்பு கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் கலாநிதி வல்லிபுர பரமசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையின் உபதலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா, கிளையின் செயலாளர் கு.பாலகிருஷ்ணன், பொருளாளர் ரி.உதயசூரியன், கிளையின் நிறைவேற்று உத்தியோகத்தர் இ.மயூரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-134)

# திருப்பி அனுப்பப்படலாம் என்ற அச்சம் தென்மண்டல கூடைப்பந்தாட்ட போட்டியை விலக்கியது இலங்கை

தென்மண்டல சிரேஷ்ட கூடைப்பந்தாட்ட போட்டி ஐதராபாத்தில் அண்மையில் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. கடந்த வருடங்களாக போட்டியில் பங்கேற்ற இலங்கை அணி திடீரென விலகியது.

இலங்கை அரசாங்கத்தின் அறிவுறுத் தலை அடுத்து குறித்த போட்டிகளில் இருந்து விலகியதாக அணி நிர்வாகம் விளக்கமளித்துள்ளது.

சென்னையில் கடந்த வாரம் இலங்கை கால்பந்து அணி திருப்பியனுப்பப்பட்டது. சென்னையை போன்று ஐதராபாத்திலும் இலங்கை போட்டியாளர்கள் திருப்பி அனுப்பப்படலாம் என்று இலங்கை அரசாங்கம் அச்சமடைந்ததால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கையிலிருந்து சென்ற மாணவர்கள் திருச்சியில் திருப்பிய னுப்பப்பட்டமை மற்றும் யாத்திரிகர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் என்பவற்றால் பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஜனாதிபதி வருகையை எதிர்த்து இந். பாராளுமன்றில் ஆர்ப்பாட்டம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்திற்கு வருவதை எதிர்த்து விடுதலைச்சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் பாராளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை அருகே அரைமணி நேரம் ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

ஜனாதிபதி மத்திய பிரதேசத்தில் நடக்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள எதிர்வரும் 20-ம் திகதி இந்தியா வருகிறார். அவரது வருகைக்கு தமிழகத்தில் உள்ள பல்வேறு கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இதன் தொடராகவே இந்திய பாராளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை முன்பு தொல்.திருமாவளவன் ஆர்ப்பாட்டம் நடத்தினார். (அ-2)

# இலவச யோகாசன வகுப்பு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் ஶ்ரீலஶ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இலவச யோகாசன வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளதாக யாழ்.மாவட்ட இந்து அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் இந்துகலாசாரம் திருமதி மா.அனந்தலெட்சுமி அறிவித்துள்ளார்.

ஆண்களுக்கான வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களிலும் பெண்களுக்கான வகுப்புகள் திங்கட்கிழமை, வியாழக்கிழமையிலும் நடைபெறவுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆண்களுக்கான புதிய வகுப்புகளும் நாளை திங்கட்கிழமை காலை 7 மணிக்கு பெண்களுக்கான புதிய வகுப்புகளும் ஆரம்பமாகவுள்ளன.

அத்துடன் எதிர்வரும் 15-ம் திகதி சனிக் கிழமை இருபாலாருக்குமான வயலின், மிருதங்கம், பண்ணிசை, வாய்ப்பாட்டு வகுப்புகளும் ஆரம்பமாகவுள்ளன. இவ் வகுப்புக்கள் சனி ஞாயிறு தினங்களிலேயே நடைபெறும். இப்பயிற்களை பயில விரும்புபவர்கள் நாவலர் மணிமண்டபத்தில் பெயர் விபரங்களை பதிவு செய்ய முடியும். மேலதிக விபரங்களுக்கு 021 321 5393 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
விசேட கட்டணக் கழிவு

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months

Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Diploma In English (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

புதிய வகுப்புக்கள் Batch I - 10.9.2012
Batch II - 12.9.2012
Batch III - 15.9.2012

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Hot Line : 0777222422 0777585913, 0714299935, 0777730074
(சி-970)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

After A/L 0212219460

aat SRI LANKA Accounting Course

O/L தகமையுடன் தொழில்துறைக் கணக்காளராய் (Accountant) வருவதற்கான துரித வழி

- குறுகிய காலத்தில் தொழில்துறைக்கு ஏற்ற கல்வி
- குறைந்த பயிற்சிக் கட்டணம்
- அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்

IBSL INSTITUTE OF BANKERS OF SRI LANKA Banking Course

CBF, DBF

வங்கியாளர் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் நடாத்தப்படுகின்றன.

BIT கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிப்பட்டதாரி ஆவதற்கான வாய்ப்பு

பல்கலைக்கழக பதிவுகளுக்கான இறுதித் திகதி 15/09/2012

- இம்முறை A/L தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும்
- O/L தகமையுடன் FIT பயிற்சிநெறியூடாக BITஐ தொடர முடியும்

புதிய பிரிவுகள் ஆரம்பம் Weekend 9/9/2012 Weekday 10/9/2012 at 9 AM

(அ994)

MCIS MindVishion College of International Studies
2nd Floor, No 4, Clock Tower Lane, Jaffna


# இந்திய - இலங்கை உறவு பாதிக்காது

(கொழும்பு)

தமிழகத்தைச் சேர்ந்த ஒரு சிலரின் நடவடிக்கைகள் இரு நாடுகளின் நட்புறவை பாதிக்காது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழக மாநிலத்தின் மிகச் சொற்பளவிலானவர்கள் நடத்தும் போராட்டங்களினால் இந்தியாவுடனான உறவுகளில் விரிசல் ஏற்பட வாய்ப்பில்லை. இந்தியா, இலங்கை தொடர்பில் சரியான புரிந்துணர்வுடன் செயற்படும் ஓர் நாடாகும்.

பொதுநலவாய நாடுகள் நாடாளுமன்ற அமர்வுகளை சாதகமான முறையில் பயன்படுத்திக் கொள்ள அனைவரும் முயற்சி எடுக்க வேண்டும். சர்வதேசசமூகத்திற்குநல்ல செய்திகளைச் சொல்ல இந்த அமர்வுகள் வழிகோலும்.

நாடு தொடர்பான உணர்வினை கருத்திற்கொண்டு அனைவரும்செயற்படவேண்டும். அரசியல் கட்சிகள் கருத்து வெளியிடும் போது நாட்டின் நன்மதிப்பை கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும்.

அரசியல் நோக்கங்களைக் கருத்திற்கொண்டு நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையிலான கருத்துக்களை வெளியிடக்கூடாது என்றார். (அ-2)


YARL Taxi

யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919

(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-60/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)

இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்

36, கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம்.
E-Mail - Yarltaxi@gmail.com

ஆங்கிலப்பயிற்சி நெறி
உயர் கல்வி அமைச்சின் சான்றிதழ்

English Course From nodes National Online Distance Education Service The Online University

0212219460

Course Fee 4,500/= Only

இணையதளத்தினூடாக மிகவும் இலகுவாக, சுயமாக, குறுகிய காலத்தில் ஆங்கில மொழியை கற்றுக்கொள்ளுங்கள்

* பாடசாலையில் பயிலும் மணவர்கள், பரீட்சைக்குத்தோற்றியோர், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் உகந்தது

20/09/2012 இற்கு முன்னதாக உங்கள் பதிவுகளை உறுதி செய்து கொள்ளுங்கள் (அ993)

Certificate issued by
National Online Distance Education Service of the Ministry of Higher Education

MCIS MindVishion College of International Studies
Authorized Center For
NODES of the Ministry of Higher Education
2nd Floor, No 4, Clock Tower Lane, Jaffna



Aptech COMPUTER EDUCATION
Unleash your potential

உலகின் No. 1 கணனிக்கல்லூரியின் 65 இலட்சம் மாணவர்களுடன் நீங்களும் இணையுங்கள்



ACCP பயிற்சி நெறியில் இணைபவர்களுக்கு Laptop இலவசம்
* Conditions Apply

(அ992)

தொழில்வாய்ப்பிற்கு ஏற்ற பயிற்சி நெறிகள்

- Desktop Office Specialist
- Website Developer
- DataBase Programmer
- Web Application Developer
- System Administrator
- IT booster - .NET
- IT booster - Java
- Smart Professional - .NET
- Smart Professional – Java
- Smart Accountant
- Smart Professional MIS
- C / C++ / C# Programmer
- AutoCAD Designer

புதிய பிரிவுகள் ஆரம்பம் Weekend 9/9/2012 Weekday 10/9/2012 at 9 AM

APTECH Computer Education World Wide
No.04, Clock Tower Lane, Navalar Road, Jaffna.
(பொருளியல் கல்லூரி அருகாமை Science corner ஒழுங்கை)





Auto A/C வாகன குளிரூட்டி



ரொயோட்டா, மஸ்டா, சுசுக்கி, மிற்சுபிஷி, மற்றும் அதிகுளிரூட்டி வாகனங்கள் (FREEZER TRUCKS) போன்ற சகலவிதமான வாகனங்களுக்கும் மிகச்சிறந்த முறையில் குளிரூட்டிகள் திருத்தம் செய்து தரப்படும்.

எமது ஏனைய சேவைகள்.

1) காஸ் நிரப்புதல்
2) திருத்த வேலைகள்
3) குளிரூட்டிகள் மீள் திருத்தம் செய்தல்.

அரசாங்க, திணைக்கள, தனியார், நிறுவன வாகனங்கள் ஒப்பந்த அடிப்படையில் திருத்தித் தரப்படும்.
(ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறந்திருக்கும்)

(அ980)

தொடர்புகளுக்கு 510 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777738888
(யாழ். இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக)



வெளிநாடு செல்லும் பயணிகளின் கவனத்திற்கு !
மாதாந்த கொடுப்பனவு முறையில் விமானக் கட்டணங்களை யாழ் நகரிலும் செலுத்தலாம் (அ995)



For monthly Installment

| | | |
|---|---|---|
| கொழும்பு | -சென்னை | 1,600/=Rtn |
| கொழும்பு | -திருச்சி | 1,450/=Rtn |
| கொழும்பு | -மாலைதீவு | 2 ,600/=Rtn |
| கொழும்பு | -சிங்கப்பூர் | 3,000/=Rtn |
| கொழும்பு | -மலேசியா | 3,350/=Rtn |
| கொழும்பு | -லண்டன் | 4,550/=Ow |
| கொழும்பு | -பிரான்ஸ் | 7,550/=Rtn |
| கொழும்பு | -ஜேர்மனி | 9,650/=Rtn |
| கொழும்பு | -கனடா | 14,600/=Rtn |

HNB Special Offer for Credit Card holders!



Prices are subject to change without prior notice.

NATION POPULAR TRAVELS & TOURS
Head office #16 ½ , E.S. Fernando Mawatha, Colombo – 06 VISA
Tel : +94 114 65 11 99 Fax :+94 114 50 55 32
#82 பிறவுன்வீதி யாழ்ப்பாணம்
(நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக) Hotline: 0214 920 920
www.nationtravels.com



யாழ் மண்ணில்....



கல்யாணமாலை KALYANAMALAI
(சர்வதேச இலவச திருமண சேவை)



இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
(பழைய எக்ஸ்போ ஏயார் விமான சேவை அலுவலகம்)
எனும் முகவரியில் இயங்குகின்றது

தொடர்பு:- 021 720 1005

பதிவுக்கட்டணம் ரூ.1000/-

குறிப்பு:- பதிவை மேற்கொள்ளும் போது சாதகம், போட்டோ என்பன அவசியம். மட்டுமே
திருமணத் தரகர்கள் பதிவு செய்ய முடியாது.
E-mail-kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சுப்போட்டி முடிபு

(யாழ்ப்பாணம்)

பாரதி விழாவையொட்டி யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்திய பேச்சுப் போட்டியில் தயாளினி முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ள பாரதி விழாவையொட்டி யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் தனது மாணவ அங்கத்தவரிடையே நடத்திய பேச்சுப்போட்டி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நேற்று சனிக்கிழமை காலை நாவலர் கலாசாலை மண்டபத்தில் இடம்பெற்றுள் ளது.

இதில் முதலிடத்தை புத்தூர் வீதி ஊரெழு வடக்கைச் சேர்ந்த தயாளினி குமாரசாமி முதலிடத்தையும், பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அபித்ரா சிவசுப்பிரமணியம் இரண்டாம் இடத்தையும் இணுவில் மேற்கைச் சேர்ந்த தம்பிஜயா மதுஜனன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

போட்டியின் நடுவர்களாக மூத்த எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், சரவணை நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியர் கு.பாலஷண்முகன் ஆகியோர் செயற்பட்டனர். வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் பாரதி விழாவின் போது வழங்கப்படும் எனத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-6)

# யாழில் ஏழு நாட்களில் ஆறுசிறுமிகள் சட்டவிரோதமாக கருத்தரிப்பு

## யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் அதிர்ச்சித் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த ஏழு நாட்களில் மட்டும் 18 வயதுக்குட்பட்ட ஆறு சிறுமியர் கருத்தரித்தமை கண்டறியப்பட்டுள்ளது என்ற அதிர்ச்சி தகவலை யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற வாராந்தப் பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்ட தகவலை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழில் கடந்தவாரம் மட்டும் ஆறு பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் நான்கு சம்பவங்கள் காதல் கோளாறினால் என்றும் இரு சம்பவங்கள் அவர்களின் உறவினர்களினால் இடம் பெற்றுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இச்சம்பவங்கள் தொல்புரம், வட்டுக்கோட்டை, மானிப்பாய் , கொக்குவில் பகுதிகளில் இடம்பெற்றுள்ளன.

இச்சம்பவங்களில் 18 வயதுக்கும் குறைந்த வயதுடைய சிறுமிகளே பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறு இடம்பெற்ற சம்பவங்களில் இம்மாதம் 2ஆம் திகதி மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியொருவரை அதே இடத்தைச் சேர்ந்த இளைஞர், புதுக்குடியிருப்புக்குக் கொண்டு சென்று துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கியுள்ளார்.

இந்நான்கு துஷ்பிரயோகச் சம்பவங்களும் காதல்கோளாறினால் இடம்பெற்றுள்ளதோடு இவற்றில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற சம்பவத்தின் சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். எனினும் அவருக்கு வீடுகொடுத்த கணவன்-மனைவி இருவரையும் தாம் கைது செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உறவினர்களால் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்ட சம்பவங்களாக கொடிகாமப் பிரதேசத்தில் 18 வயதுடைய மனநிலை பாதிக்கப்பட்ட சிறுமி ஒருவரை அச்சிறுமியின் பெரிய தந்தையும், மானிப்பாய் பகுதியில் 16 வயதுடைய சிறுமியொருவரை பதுளையைச் சேர்ந்த 17 வயதுடைய அச்சிறுமியின் ஒன்றுவிட்ட சகோதரனும், இதனைவிட மாங்குளம் பிரதேசத்தில் 15 வயதுடைய சிறுமியை அச்சிறுமியின் தாயின் இரண்டாவது கணவரும் பாலியல் துஷ்பிரயோகம் செய்த கொடூரமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இச்சம்பவங்கள் இடம்பெற்று நீண்ட நாட்களாகின்றபோதும் குறித்த சம்பவங்களில் பாதிக்கப்பட்ட சிறுமிகள் தாம் கருத்தரித்துள்ளமையை கடந்த வாரங்களிலேயே அறிந்திருந்தனர். அதன்பின்னரே அவர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறு கருத்தரித்த சிறுமிகள் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வைத்திய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

(அ-4)

## மஹிந்தவின் நிகழ்ச்சிநிரல் தொடர்பில் ஆராய குழுவொன்று இந்தியா செல்லும்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நிகழ்ச்சிகள் தொடர்பான ஏற்பாடுகளை உறுதி செய்வதற்கு, இலங்கையில் இருந்து முன்னோடி குழுவொன்று அடுத்தவாரம் புதுடில்லி செல்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தனிப்பட்ட பயணமாக இந்தியா செல்லவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 20 ஆம் திகதி புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

இதற்கு முன்னோடியாக அவரது புதுடில்லிப் பயண நிகழ்ச்சிகள் குறித்த பணிகளை மேற்கொள்ள உயர்மட்டக்குழுவொன்று அடுத்த வாரம் கொழும்பிலிருந்து செல்லவுள்ளது.

இந்த குழுவில் சில அமைச்சர்களும் அதிகாரிகளும் இடம்பெறக் கூடும் என தகவல்கள் கூறியுள்ளன. இருநாடுகளின் தலைவர்களும் இத்தரப்பு விவகாரங்கள் குறித்து பேசக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 21ஆம் திகதி சாஞ்சியில் பௌத்த பல்கலைக்கழகத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பங்கேற்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்தியா பயணிக்கவுள்ளார். (அ-2)


## ஐ.நா.பொருளாதார ஆணைக்குழுவின் தொழில்நுட்பக்குழுவின் தலைவர் பதவி மீண்டும் இலங்கைக்கு

ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பக் குழுவின் தலைவர் பதவி இம்முறையும் இலங்கைக்கே கிடைக்கப்பெற்றுள்ளது.

ஆசிய பசுபிக் வலயத்தில் தகவல் தொழிநுட்ப சமூகம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாக நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பமான மாநாட்டில் ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பக் குழுத் தலைவராக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

25 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளின் ஏகோபித்த முடிவின்படியே அந்த நியமனம் இடம்பெற்றது. ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பக் குழுவின் தலைவர் பதவி இலங்கைக்கு கிடைத்திருப்பது இது மூன்றாவது தடவையாகும்.

இலங்கையில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இத்துறைக்கு வழங்கியுள்ள அரசியல் தலைமைத்துவம் போன்றவையே இலங்கைக்கு இத்தகைய கௌரவத்தைப் பெற்றுத்தந்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தமது தலைமை பதவியை ஏற்றுக் கொண்டு உரை நிகழ்த்துகையில் தெரிவித்துள்ளார். (அ-2)



சர்வதேச இந்துமத குருபீடத்தின் ஆன்மீகப்பெருவிழா அண்மையில் யாழ்.மாவட்டத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் நல்லை ஆதீனக்குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சர்ய சுவாமிகள்,ஸ்ரீஜயப்பதாசக்குருக்கள் ஆகியோர் இணைந்து சாதனையாளர் விருதினை நல்லைக்குருமணியின் பிரதமவாரிசு பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மாவிற்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## நிறுத்தல் அளவைக் கருவிகள் முத்திரையிடப்படும்

(புளியம்பொக்கணை)

கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சகல வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றின் நிறுவைகள் மற்றும் அளத்தல் கருவிகளுக்கு நாளை திங்கட்கிழமையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணிவரை கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் முத்திரையிடப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களினதும் சகல வர்த்தக நிலையங்களினதும் நிறுவைகள் மற்றும் அளத்தல் கருவிகளை குறித்த தினங்களில் முத்திரையிடுமாறு கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்துள்ளார். (அ-3-263)

## நாமல் ராஜபக்ச ஸ்ரீ.சு.க. இன் முதலீடு

### பிரதியமைச்சர் கொத்தலாவல தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால முதலீடு என துறைமுகம் மற்றும் பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

அம்பாலங்கொட மீன்பிடி கிராமத்தின் வீதி அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

கிராமங்களை இணைக்கும் வீதியை நிர்மாணிக்க வேண்டும் என்ற யோசனையை முன் வைத்தவர் நாமல் ராஜபக்ஷ. அவர் மூன்று மாகாணங்களில் நடைபெறும் தேர்தல் பணிகளின் இணைப்பாளராக கடமையாற்றுவதால், இந்த வைபவத்திற்கு சமுகமளிக்கவில்லை. அவர் திறமையான இளம் தலைவர். அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முதலீடு. அவர் மூலம் நாட்டின் அடுத்த தலைமுறைக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக உருவாக்கப்பட்டுள்ளார் எனவும் பிரதியமைச்சர் கூறியுள்ளார். (அ-2)

## பொதுநலவாய மாநாடு கொழும்பில் ஆரம்பமானது

பொதுநலவாய பாராளுமன்ற ஒன்றியத்தின் 58 ஆவது வருடாந்த மாநாடு கடந்த 7 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமானது.

இம்மாநாடு எதிர்வரும் 15 ஆம்திகதி வரை நடைபெறும் எதிர்காலத்திற்குப் பொருத்தமான பொது நலவாய அமைப்பை உறுதிப்படுத்துதல் என்பதே மாநாட்டின் தொனிப் பொருளாகும்.

பிரதான மாநாடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நாளை திங்கட்கிழமை தாமரை தடாக அரங்கில் நடைபெறும். சபாநாயகர் தலைமையிலான ஆலோசனைக் குழுவும், பிரதிசபாநாயகர் தலைமையிலான ஏற்பாட்டுக் குழுவும் மாநாட்டுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளன.

மாநாட்டின் பல்வேறு அம்சங்களை கவனிப்பதற்காக பதினாறு உபகுழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கிய செயலமர்வுகள் 12 ஆம் திகதி நடைபெறும். இதில் பேராளர்கள் பங்குபற்றுவர்.

சுகாதாரம், கல்வி, தொழில்பயிற்சி ஆகியவற்றுக்கு எதிர்கால தலைமுறையினரை வலுவூட்டுதல் என்ற தலைப்பில் செயலமர்வு நடைபெறும். பல்வேறு தலைப்புக்களில் கருத்துப் பரிமாறல்களில் பேராளர்கள் பங்குகொள்வர். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிகளை விசாரிக்க சுவிஸ் சட்டவாளர்கள்

## நுழைவிசைவு வழங்க இலங்கை மறுப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின்நிதி வலையமைப்புக்கு எதிரான வழக்கில் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளிடம் குறுக்கு விசாரணை செய்ய சுவிட்சர்லாந்து அரச சட்டவாளர்கள் இந்த வாரம் கொழும்பு வரவுள்ளனர்.

சுவிட்சர்லாந்து அரச சட்டவாளர்கள், இலங்கையில் தடுப்பில் உள்ள விடுதலைப் புலிகளிடம் இந்த வாரமும் அடுத்த வாரமும் குறுக்கு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

எனினும் இந்த விசாரணைகளில் பங்கேற்க கொழும்பு வருவதற்கு எதிர்த்தரப்பு சட்டவாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் நுழைவிசைவு வழங்க மறுத்து விட்டது.

அரச சட்டவாளர்களுடன் ஐந்து பொலிஸ் அதிகாரிகளும், இரண்டு மொழிபெயர்ப்பாளர்களும் கொழும்பு வரவுள்ளனர்.

எதிர்த்தரப்பு சட்டவாளர்களுக்கு இலங்கை அரசு நுழைவிசைவு வழங்க மறுத்துவிட்டதால் அவர்கள் பேர்னில் இருந்தவாறு சாட்சிகளிடம் நடத்தப்படும் குறுக்கு விசாரணைகளில் நேரலை, காணொளி தொழில் நுட்பம் மூலம் பங்கேற்கவுள்ளனர்.

இதன் மூலம் சாட்சிகளிடம் அவர்கள் கேள்விகளை எழுப்ப முடியும். இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம் விடுதலைப் புலிகளின் சட்டவாளர்களுக்கு நுழைவிசைவு வழங்க இணங்கிய போதும் இலங்கை வெளிவிவகார அமைச்சு தலையிட்டு அதை நிராகரித்து விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்த பாகிஸ்தானும் இலங்கையும் இணக்கம்

(கொழும்பு)

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள பாகிஸ்தானும் இலங்கையும் இணக்கம் வெளியிட்டுள்ளன.

பயங்கரவாத இல்லாதொழிப்பு உள்ளிட்ட சகல விதமான பாதுகாப்பு விவகாரங்களிலும் இரு நாடுகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகளைப் பேண இணக்கம் காணப்பட்டுள்ளது.

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவப் பயிற்சி, புலனாய்வுத் தகவல் பரிமாற்றம், ஆயுத பயிற்சி உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# 36 புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த அனுமதி கோருகிறது கோப்பாய் பி.செயலகம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் முன்னெடுக்கப்படவுள்ள 36 புதிய திட்டங்களுக்கான அனுமதி கோரப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போதே பிரதேச செயலாளரினால் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதில் பிரதேச செயலகத்தினால் 11 திட்டங்களும் பிரதேச சபையினால் 16 திட்டங்களும் கல்வித் திணைக்களத்தினால் 9 திட்டமும் மொத்தமாக 36 திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சுமார் 29 இலட்சத்து 93 ஆயிரம் ரூபா செலவில் இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## கூடங்குள அணுமின் நிலையத்தால்

# இலங்கைக்கு பாதிப்பு ஏற்படும்; கண்டறிய விசேட கருவிகள்

தமிழகத்தின் கூடங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள அணுமின் நிலையத்தினால் இலங்கையில் கதிரியக்க பாதிப்புக்கள் ஏற்படுகின்றனவா என்பதை கண்டறிவதற்கான விசேட கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

கற்பிட்டி, டெல்ப் தீவு, காங்கேசன்துறை போன்ற இடங்களில் மாத்திரம் முதற்கட்டமாக இந்தக் கருவிகள் பொருத்தப்படுகின்றன.

பின்னர் காலி, கொழும்பு, திருகோணமலை போன்ற இடங்களிலும் இந்த கருவிகள் பொருத்தப்படும் என்று இலங்கை அணுசக்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

கூடங்குளம் மின்னுற்பத்தி நிலையத்தில் கசிவு ஏற்பட்டால் அதன் பாதிப்பு இலங்கையிலும் ஏற்படும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவ்வாறான அபாயங்கள் குறித்து இந்தக் கருவிகள் எச்சரிக்கை செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.09 09

★ 1493-ஒட்டோமான் பேரரசின் ஆக்கிரமிப்புக்கு எதிரான குரொவேசியர்களின் போராட்டம் தோல்வியில் முடிந்தது.

★ 1513-ஆங்கிலேயர்களுக்கு எதிரான போரில் ஸ்கொட்லாந்தின் நான்காம் ஜேம்ஸ் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டான்.

★ 1543-மேரி ஸ்டுவேர்ட் 9 மாதக் குழந்தையாக இருக்கும் போது ஸ்கொட்லாந்தின் அரசியாக முடிசூடினாள்.

★ 1791-ஜனாதிபதி ஜோர்ஜ் வோஷிங்டன் நினைவாக ஐக்கிய அமெரிக்காவின் தலைநகர் வோஷிங்டன் டி.சி. எனப் பெயரிடப்பட்டது.

★ 1799-பாஞ்சாலங்குறிச்சி கோட்டை பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டது.

★ 1839-அலபாமாவில் இடம்பெற்ற பெரும் தீயில் நூற்றுக்கணக்கான கட்டடங்கள் எரிந்து சேதமடைந்தன.

★ 1839-ஜோன் ஹேர்ச்செல் தனது முதலாவது ஒளிப்படத்தை கண்ணாடித் தட்டில் எடுத்தார்.

★ 1850-கலிபோர்னியா 31 ஆவது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவில் இணைந்தது.

★ 1922-கிரேக்க- துருக்கி போர் துருக்கியரின் வெற்றியுடன் முடிவுக்கு வந்தது.

★ 1924-ஹவாய் கௌவை நகரில் சீனித் தொழிற்சாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 16 பேர் உயிரிழந்தனர்.

★ 1939-இரண்டாம் உலகப் போர்: போலந்தின் குரோவ் நகர் மீது நாசி ஜேர்மனியர் குண்டுகளை வீசித் தாக்கினர்.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய விமானம் ஒரிகனில் குண்டு வீசியது.

★ 1944-பல்கேரியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து சோவியத் சார்பு அரசு பதவியேற்றது.

★ 1945-இரண்டாவது சீன- ஜப்பான் போரில் ஜப்பான் சீனாவிடம் சரணடைந்தது.

★ 1954-அல்ஜீரியாவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் ஆயிரத்து 500 பேர் உயிரிழந்தனர்.

★ 1965-சூறாவளி பெட்சி நியூ ஓர்லியன்சில் இரண்டாவது தடவை தரை தட்டியதில் ஏற்படுத்தியதில் 76 பேர் உயிரிழந்தனர். $1.42 பில்லியன் சேதமடைந்தது.

★ 1970-பிரித்தானிய விமானம் பாலஸ்தீனத் தீவிரவாதிகளினால் கடத்தப்பட்டு ஜோர்தானுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

★ 1990-சத்துருக்கொண்டான் படுகொலை: மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பகுதியில் 5 கைக் குழந்தைகள், 42 பத்து வயதுக்கு குறைவான சிறுவர்கள், 85 பெண்கள், 28 முதியவர்கள் உட்பட 184 தமிழர்கள் உயிரிழந்தனர்.

★ 1991- சோவியத் ஒன்றியத்தில் இருந்து தஜிகிஸ்தான் விடுதலையடைந்தது.

★ 1993-பாலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலை தனிநாடாக அங்கீகரித்தது.

★ 2001- ஆப்கானிஸ்தானில் தேசிய முன்னணித் தலைவர் அகமது ஷா மசூட் கொலை செய்யப்பட்டார்.

★ 2004- இந்தோனேசியா ஜகார்த்தாவில் அவுஸ்திரேலிய தூதரகத்துக்கு முன்னால் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 10 பேர் உயிரிழந்தனர்.

★ 2006- திறந்த அமெரிக்க டென்னிஸ் பந்தயத்தில் ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா வெற்றி பெற்றார்.

### பிறப்பு

★ 1899-கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி, தமிழ் எழுத்தாளர் (இ.1954)

### இறப்புக்கள்

★ 1087-முதலாம் வில்லியம், இங்கிலாந்தின் மன்னன்

★ 1947-ஆனந்த குமாரசுவாமி, கலாயோகி (பி.1877)

★ 1976-மாவோ சே துங், சீனாவின் முதல் தலைவர், பொதுவுடைமைவாதி (பி.1893)

★ 2003-எட்வர்ட் டெல்லர், ஐதரசன் குண்டைக் கண்டுபிடித்தவர், அமெரிக்க இயற்பியலாளர் (பி.1908)

★ 2005- இளையபெருமாள், தலித் தலைவர் (பி. 1924)

★ 2011- பழம்பெரும் தமிழ் நடிகை காந்திமதி

### கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி



கல்கி புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர் ஆவார். இவரின் இயற்பெயர் ரா. கிருஷ்ணமூர்த்தி. 35 சிறுகதைத் தொகுதிகள், புதினங்கள், கட்டுரைகள், பயணக்கட்டுரைகள் மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதியுள்ளார்.

எனினும் மிகச் சிறந்த சமூக மற்றும் வரலாற்றுப் புதினங்களை எழுதியதற்காக பரவலாக அறியப்படுகிறார். இவர் எழுதிய பொன்னியின் செல்வன் புதினம் மிகப் புகழ் பெற்றதாகும். தன் படைப்புக்கள் மூலம் இந்திய தேசிய விடுதலை போராட்டத்திற்கும் பங்களித்திருக்கிறார்.


கல்கி 1899 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள புட்டமங்கலம் என்னும் ஊரில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். ஆரம்பப் பாடசாலைப் படிப்பை தனது கிராமத்தில் முடித்த பின்னர் திருச்சியில் உள்ள தேசிய உயர் நிலைப் பாடசாலையில் சேர்ந்தார்.


1921 இல் மகாத்மா காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்த போது அவரது கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு கல்கி தனது பாடசாலைப்படிப்பைப் பாதியில் துறந்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்.

1922 இல் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்றதற்காக ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் குழுவினர் யாழிற்கு வருகை





(யாழ்ப்பாணம்)

தென்னாபிரிக்காவின் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் உள்ளிட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வர்த்தக தூதுக்குழுவினர் வட மாகாண பிரதம செயலாளர் உள்ளிட்ட உயரதிகாரிகளை நேற்று யாழ்ப்பாணத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணம் பலாலிக்கு் விமானம் மூலம் வந்திறங்கிய ஆபிரிக்க வர்த்தக தூதுக் குழுவினர் காலை 8.30 மணியளவில் யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதிக்கு வருகை தந்தனர்.

அங்கு இந்தக் குழுவினரை வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ் தலைமையிலான வடமாகாண உயரதிகாரிகள் மற்றும் பாடசாலை மாணவிகள் மலர் மாலை அணிவித்து வரவேற்றனர்.

இதன்பின்பு அங்கு ஆபிரிக்க பிரதி அமைச்சர் மற்றும் வர்த்தக தூதுக்குழுவினருடன் வடமாகாண உயரதிகாரிகள் கலந்துரையாடினர். இவர்களுடனான சந்திப்பின்போது யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் கலந்து கொண்டிருந்தார்.

இதில் வடமாகாண பிரதம செயலாளரினால் வடக்கு மாகாணத்தில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் விளக்கப்பட உதவியுடன் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது மீள்குடியேற்றம், வீதிப் புனரமைப்பு, மக்களுக்கான அடிப்படை உதவிகள், தொழில் வாய்ப்புகள், வாழ்வாதார செயற்பாடுகள், கல்வி, விளையாட்டு, கலாசாரம் போன்ற பல்வேறு துறைகளில் மேற்கொளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் எடுத்துக் கூறப்பட்டன. இதுதவிர கைத்தொழில் துறைசார்ந்த முன்னேற்றங்கள் தொடர்பிலும் எடுத்துக் கூறப்பட்டது.

மேலும் இந்தக் கலந்துரையாடலின் போது யாழ்.அரச அதிபரினால் யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் எடுத்துக் கூறப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண பிரதம செயலாளர் தலைமையிலான குழுவில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இலங்கோவன், வட மாகாண கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடமாகாண கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி ஸ்ரீதேவி, யாழ்.அரச அதிபர், யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

ஆபிரிக்க வர்த்தக தூதுக்குழுவில் சுமார் 15 பேர் வருகை தந்திருந்தனர். வட மாகாண உயரதிகாரிகளுடனான சந்திப்பின் பின்னர் இக்குழுவினர் அச்சுவேலியிலுள்ள கைத்தொழில் பேட்டைக்கும் சென்றனர்.

யுத்தகாலத்தில் அழிவடைந்துபோன அச்சுவேலி கைத்தொழில் பேட்டை தற்போது புனரமைப்பு செயற்பட்டு வருகின்றது. இதனால் பலர் தமக்கான தொழில்வாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியும்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் இந்தக் கைத்தொழில் பேட்டை புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

இதனைப் பார்வையிட்ட பின்னர் ஆபிரிக்க பொருளாதார பிரதி அமைச்சர் உள்ளிட்ட வர்த்தக தூதுக்குழுவினர் கொழும்பு புறப்பட்டனர். (அ-6)

# ஆசிரியர் கலாசாலை இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கடந்த 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி பயிற்சியை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 4 தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளதாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

இப்பரீட்சையில் தோற்றும் ஆசிரியர்கள் பரீட்சைக்குத் தயார் செய்யும் வகையில் நாளை திங்கட்கிழமை முதல் தத்தமது வலயக் கல்விப் பணிப்பாளர்களது அனுமதியுடன் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் தேவை கருதி கற்கை விடுமுறையினை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-9)

# இலங்கை-தமிழக உறவுகள் பலவீனமாக காணப்படுகின்றன

## எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழகத்திற்கும் இடையிலான உறவுகள் மிகவும் பலவீனமாகக் காணப்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கும் தமிழகத்துக்கும் இடையில் வரலாற்றுக்காலம் முதல் மிக நெருங்கிய பிணைப்பு காணப்பட்டு வந்தது.

ஆளும்கட்சி முக்கிய அரசியல்வாதிகள், தமிழக அரசியல்வாதிகளை விடுதலைப்புலி உறுப்பினர்களாக சித்திரித்து வருகின்றனர்.

இவ்வாறான கருத்துக்கள் இரு தரப்பிற்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தாது. அரசாங்கத்தில் அங்கம் வகிப்போர் பல்வேறு கருத்துக்களை வெளியிட முடியும். எனினும் இந்தக் கொள்கைகள் தேசிய அரசியல் கொள்கைகளை பாதிக்கக்கூடாது.

இலங்கை யாத்தரிகர்கள் மீது தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. வெளிநாட்டு பிரஜைகளது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அந்தந்த நாடுகளின் மிக முக்கியமான பொறுப்பாகும் என்றார். (அ-2)

# எழுத்துமூலமான உறுதிமொழியின்றி போராட்டத்தை கைவிட முடியாது

## பல்கலை.விரிவுரையாளர்கள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தவொரு சூழ்நிலையிலும் எழுத்து மூலமான உறுதிமொழியின்றி தொழிற்சங்கப் போராட்டத்தை கைவிடத் தயாரில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்தின் தலைவர் நிர்மால் ராஞ்சித் தெரிவித்துள்ளார்.

இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் நிதி உதவி அளிப்பதாக செய்யப்படும் பிரசாரங்களில் உண்மையில்லை. இரண்டு மாதங்களாக சம்பளம் பெற்றுக் கொள்ளாத காரணத்தினால் சில விரிவுரையாளர்கள் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்காது இந்தப் பிரச்சினையை மேலும் நீடித்துச் செல்ல முயற்சி செய்ய வேண்டாம் என அரசாங்கத்தை கோருகின்றோம்.

உரிய தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்படும் வரையில் தொழிற்சங்கப் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் க.பொ.த.(உயர்தர) பரீட்சை விடைத்தாள் புள்ளியிடும் பணிகள் பல்கலைக்கழக ஆசிரியர்களின் மேற்பார்வையின்றி நடைபெறும் என உயர்கல்வி அமைச்சும் கல்வி அமைச்சும் கூறுகின்ற போதிலும் பல்கலைக்கழக நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கும் வரை ஆசிரியர்கள் புள்ளியிடும் கடமையில் ஈடுபட மாட்டார்கள் என ஆசிரியர் சங்கங்கள் கூறியுள்ளன. (அ-2)

# 28 வருடங்களின் பின் வாக்குச் சாவடி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தின் தென்னமரவாடி பிரதேசத்தில் 28 வருடங்களின் பின் முதல் தடவையாக இம்முறை வாக்குச் சாவடியொன்று அமைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யுத்த சூழ்நிலைகளால் இடம்பெயர்ந்திருந்த மக்கள் அனைவரும் இக்கிராமத்திற்கு திரும்பியுள்ளதால் மாகாணசபைத் தேர்தல்களுக்காக அங்கு வாக்குச்சாவடி அமைக்கப்படவுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-2)


# மரண அறிவித்தல்

## திருமதி.சோமசுந்தரம் சரஸ்வதி



காரைநகர் கோவளம் நட்டுப்பாடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் சரஸ்வதி 07.09.2012 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளை ஆச்சிமுத்துவின் அன்பு மகளும் காலஞ்சென்ற கார்த்திகேசு வள்ளியம்மையின் மருமகளும் ஆவார். அன்னார் காலஞ்சென்ற வர்த்தகர் கார்த்திகேசு சோமசுந்தரம் (அல்து முல்லை) அவர்களின் அன்பு மனைவியும், நாகம்மாவின் சகோதரியும் ஆவார்.

பரமேஸ்வரன் (அல்துமுல்லை) காலஞ்சென்ற விக்னேஸ்வரன், சுந்தரேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

சகுந்தலாதேவி, சுந்தராம்பாள் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் உமாசங்கர், ஜெயசங்கர், சிவசங்கர், சசிசங்கர், தர்சிகா, திலக்ஷி (யாழ். இந்துக் கல்லூரி), அருட்குமரன் (யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 09.09.2012 (ஞாயிற்றுக்கிழமை) இன்று காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக சாம்பாலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

கோவளம்
காரைநகர்.

(சி/997)


தகவல்:-
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

35

## தாதுசேனனும் காசியப்பனும்




அனுராதபுரத்திலுள்ள சிகிரியாக்குன்று

காசியப்பன் (கி.பி.477-கி.பி. 495) அனுராதபுரத்தின் மன்னனாக முடி புனைந்த கொண்டான். அவனால் அரசுக்குரிமையுடையவனான மூத்த சகோதரன், மொகாலானனை கொல்ல முடியாது போயிற்று. மொகாலானன் எந்த வேளையிலும் இந்தியாவிலிருந்து படையுடன் வரலாமென்ற பயம் இருந்தமையால், எவரும் இலகுவில் அடையமுடியாத சிகிரியாக் குன்றில் தனது அரண்மனையை அமைத்துக் கொண்டான்.··சிகிரியா வைத்தன் தலைநகரமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். சிங்கமொன்றின் நுழைவாயில் தோற்றத்தோடு கூடியதாகச் சிகிரியாவை உருவாக்கினான். தனது திரண்ட செல்வங்களை எல்லாம் அச்சிகிரியா மாளிகையில் சேர்த்து வைத்து, குபேரன்போல வாழ்ந்தான். சேனாதிபதி மீகாரனும் தனது பெயரால் ஒரு பிரிவேனாவை அமைத்தான். சிகிரியாவைச் சுற்றி பூந்தோட்டங்களையும் நகரத்தையும் காசியப்பன் உருவாக்கினான். சிகிரியா ஓர் அற்புதமான கலைத்துவ நகரமாகவுள்ளது. சிகிரியாக் குன்றைமையமாகக் கொண்டு திட்டமிட்ட வடிவில் நகரம் அமைந்துள்ளது. கண்ணாடிச் சுவர்கள், தேவ கன்னிகைச் சித்திரங்கள், வர்ண ஓவியங்கள், சுவர்க் கவிதைகள், கலைச் செதுக்கல்கள், சிற்பங்கள் என்பன சிகரியாவின் குறிப்பிடத்தக்க கலை வடிவங்களாக

சிகிரியா ஓவியம்



காசியப்பனின் கல் இருக்கை




இன்றும் விளங்குகின்றன. காசியப்பன் இசுறுமுனியா விகாரையைப் புதுப்பித்தான். இவை அனைத்தும் அவன் புகழை நிலைபெற வைத்துள்ளன.


காசியப்பனுக்கு போதி, உபலவண்ண என இருபுதல்விகள் இருந்தனர். இவ்வாறு புதல்விகளின் பெயரால் இசுறுமுனியா விகாரையில் இளம் பிக்குகள் கல்விக்கூடம் அமைக்கப்பட்டது. நீயாந்தித் தோட்டத்திற்கு அருகிலும் ஒரு விகாரையைக் காசியப்பன் கட்டினான். அவ்வாறு பல சமயப்பணிகளை அவன் மேற்கொண்டான். எனினும் மறுஉலகம் பற்றியும் மொகாலானன் பற்றியும் எப்பொழுதும் பயந்தவனாகவே விளங்கினான். காசியப்பன் கி.பி.527 தொட்டு கி.பி. 544 வரை அரசாண்டான்.

மொகாலாளன் பதினெட்டாம் வருடம், மொகாலாளன் இந்தியாவிலிருந்து பெரும் படையுடன் வந்திறங்கி, அம்பத்து கோல மாவட்டத்தில் குதாரி விகாரையின் அருகில் பாசறை அமைத்துக் கொண்டான். காசியப்பன் தனது படையுடன் அணிவகுத்து எதிர்கொண்டான். பெரும் போர் இரு படைகளுக்கும் மூண்டது. இதுபெரும் கடல்கள்போல் மோதிக் கொண்டனர். போர் நடந்து கொண்டிருந்த விடத்தில் காசியப்பனுக்குமுன் தடையாகப் பெரும் சதுப்பு நிலம் காணப்பட்டது. அதனால், காசியப்பன் தனது யானையை புதிய பாதையில் நடத்துவதற்காகத் திருப்பினான். அதனைக் கண்ணுற்ற காசியப்பனின் படைவீரர்கள், "நமது மன்னர் திருப்புகிறார். புறமுதுகிடுகிறார். எல்லாரும் பின்வாங்குங்கள்" என சத்தமிட்டபடி பின்வாங்கி ஓடினர். மொகாலானன் வீரர்கள், "எதிரிகளின் முதுகுகள் தெரிகின்றன" என வெற்றி ஒலி எழுப்பினர். அவற்றினைகக் கண்ணுற்ற காசியப்பன், தனது உறையிலிருந்த கத்தியை எடுத்துத் தன் கழுத்தினை அரிந்து தற்கொலை செய்து கொண்டான்.


காசியப்பனுக்கான மரண சடங்குகளை மொகாலானன் நிறைவேற்றினான். அரண்மனைக்குத் திரும்பி, காசியப்பனின் முழுச் செல்வத்தையும் தனதாக்கிக் கொண்டான். மகாமேகவனத்திற்கு வந்து வழிபாடியற்றினான். ஏனைய இரு விகாரைகளுக்கும் (அபயகிரி, ஜெந்தவனராம) சென்று வழிபாடு இயற்றினான். மன்னனாகியதும் தன் தந்தை தாது சேனனின் மரணத்திற்குக் காரணமானவர் எனக் கருதிய ஆயிரமளவிலான உயர்பதவியினரை சிறைசெய்து, அவர்களது காதுகளையும், மூக்குகளையும் அரிந்த பின்னர், நாடுகடத்திவிட்டான். தந்தையின் சடலத்திலிருந்து அவரின் பல் ஒன்றை எடுத்து ரட்ஷையாக அணிந்து கொண்டான்.

இலம்பகர்ண மரபினைச் சேர்ந்த தத்காப்பகுதி என்பவன் முன்னர் காசியப்பன் படையில் இருந்தவன். சிறு மனத்தாக்கம் காரணமாக மேரேலிய என்ற கிராமத்தில் கரந்துறைந்தான். அவனுக்கு சிலாகாலன் என்றொரு மகன், அவனும் காசியப்பனுக்குப் பயந்து இந்தியா சென்று மொகாலானனுடன் சேர்ந்து கொண்டான். சிலாகாலன், இந்தியாவிலிருந்து புத்தரின் கேசதாதுவை (மயிர்ச்சின்னம்) இலங்கைக்கு எடுத்துவந்தான். மொகாலானன் அவனை மரியாதையோடு வரவேற்று, அதற்கென ஒரு தனிக் கட்டடத்தை அமைத்து அதில் கேசதாதுவை தாபித்தான். அத்தோடு சிலாகாலனை வாள்படைத் தளபதியாகவும் (அசிகாஹா) நியமித்தான். அதனால் அவன் அசிகாஹா சிலாகலன் என அழைக்கப்பட்டான். மொகாலானன் தனது சகோதரியையும் அவனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான். மொகாலானன் தனது ஆட்சியின் பதினெட்டாம் வருடம் மரணமடைந்தான்.

(தொடரும்)




சிகிரியாவின் நுழைவாயில்




சிகிரியாவிலுள்ள அரண்மனை இடிபாடுகளும் குளங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. கப்பலில் போதைப்பொருள் கடத்தல்; 3 கப்டன் மீது விசாரணை



வெனிசுலா நாட்டில் மாரா கைபோ துறைமுகத்தில் ஓசன் அட்லஸ் என்ற அமெரிக்க சரக்குக் கப்பலை அதிகாரிகள் அங்குலம், அங்குலமாக சோதனை செய்துள்ளனர். அந்தக் கப்பலில் சட்டவிரோதமாக போதைப்பொருட்கள் கடத்தப்பட்டு வருவதாக கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இந்த சோதனை நடைபெற்றது.

முடிவில் அந்த கப்பலில் போதைப்பொருட்கள் எதுவும் இல்லை என தெரிய வந்தது. அதே நேரத்தில் 3 துப்பாக்கிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து கப்பலின் கப்டனையும் சிப்பந்தியையும் வெளியே செல்ல அதிகாரிகள் தடைவிதித்தனர்.

அதைத் தொடர்ந்து கப்டனை கைது செய்து விசாரணை நடத்துகின்றனர். இந்த தகவலை கரக்கசில் உள்ள அமெரிக்க தூதரகமும் உறுதி செய்துள்ளது. (அ-2)

# வேற்றுக்கிரகவாசிகள் குறித்து 40 ஆண்டுகளில் தெரியவரும்

## பிரிட்டன் விஞ்ஞானிகள் தகவல்

வேற்றுக்கிரகவாசிகள் இருக்கின்றனவா என்பது இன்னும் 40 ஆண்டுகளில் கண்டறியப்படலாம் என்று பிரிட்டிஷ் விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து லண்டன் றோயல் சொசைட்டியின் தலைவரும் விஞ்ஞானியுமான லார்டு மார்ட்டின் ரீஸ் கூறுகையில்,

பூமியில் மட்டும்தான் உயிரினங்கள் வாழ்கின்றனவா என்ற கேள்விக்கு இதுவரை விஞ்ஞானிகளாலும் தத்துவ ஞானிகளாலும் விடையளிக்க முடியவில்லை.

சூரியனை பூமி உள்ளிட்ட கோள்களை சுற்றி வருவதைப் போல வேறு பல நட்சத்திரங்களை அவற்றுடன் சேர்ந்த கோள்கள் சுற்றி வருகின்றன என்பதை 10 ஆண்டுகளுக்கு முன்தான் நாம் தெரிந்து கொண்டோம்.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டுகளுக்குள் நமது விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் சூரிய குடும்பத்தையும் தாண்டி வேறு நட்சத்திரத்தைச் சேர்ந்த கோள்களை தெளிவாக காணும் முறைகளை கண்டுபிடிக்க வாய்ப்புள்ளது.

அப்போது வேற்று கிரகவாசிகள் குறித்து தெரிந்து கொள்ளும் அரிய வாய்ப்பு கிடைக்கலாம் என்றார். (அ-2)

# ஈரானின் ஜனாதிபதி தேர்தல் அடுத்த ஆண்டு

ஈரான் நாட்டின் தற்போதைய ஜனாதிபதியாக மஹ்மூத் அகமதி நிஜாத்தின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஜூன் மாதம் நிறைவடைகிறது. அடுத்த ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்காக எதிர்வரும் ஜூன் 14 ஆம் திகதி தேர்தல் நடக்கவுள்ளது. கடைசியாக கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் அகமதி நிஜாத் இரண்டாவது முறையாக ஈரான் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஈரான் நாட்டு விதிப்படி ஒருவர் இரண்டு முறைக்கு மேல் ஜனாதிபதியாக முடியாது.

கடந்த மாதம் ஈரானில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கீ மூன் அந்நாட்டின் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிக்கும்படி ஆணையிட்டதால் அதுவரை சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஈரானின் முன்னாள் பிரதமர் மிர் ஹொஸ்சீன் மௌசாவி மற்றும் சபாநாயகர் மெஹ்தி கரௌபி உள்ளிட்ட பலர் விடுவிக்கப் பட்டனர்.

இந்நிலையில் வர இருக்கும் ஜனாதிபதி தேர்தலில் மௌசாவி உள்ளிட்ட முன்னாள் அரசியல் தலைவர்கள் முக்கியபங்கு வகிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

# சிரியா போருக்கு ஈரான் படைகள் உதவுகின்றன


சிரிய அரச படையினருக்கு ஆதரவாக 150 படைவீரர்களை ஈரான் அனுப்பி உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரான் ஜனாதிபதி அஹமது நிஜாத்தின் உத்தரவின் பேரிலேயே அவர்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் துப்பாக்கிகள், ரொக்கெட்டுகள் உட்பட பல்வேறு ஆயுதங்களையும் ஈரான் சிரியாவுக்கு வழங்கி வருகிறது. இதனால் பலி எண்ணிக்கை மேலும் அதிகமாகலாம் என்று அஞ்சப்படுகிறது.

இந்நிலையில் முன்பை விட சிரியாவிடம் அதிகளவு இரசாயன ஆயுதங்கள் உள்ளதாகவும் இவைகள் போராட்டக்காரர்களின் மீது பயன்படுத்தப்படுவதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன. (அ-2)

# இஸ்ரோ தலைவர் திருப்பதியில் தரிசனம்



(திருப்பதி)

இந்திய வான்வெளி ஆராய்ச்சி மைய (இஸ்ரோ) தலைவர் கே. இராதா கிருஷ்ணன் நேற்று முன்தினம் திருப்பதிக்கு சென்று ஏழுமலை யானை தரிசனம் செய்தார். இந்தியாவின் 100 ஆவது றொக்கெட் பி.எஸ்.எல்.வி.சி.21 ஸ்ரீஹரிஹோட்டலில் இருந்து பறக்க விடப்படுகிறது.

இந்த றொக்கெட் பயணம் வெற்றிகரமாக அமைய வேண்டி பிரார்த்தனை செலுத்த அவர் திருப்பதி சென்றுள்ளார். பி.எஸ்.எல்.வி.சி 21 றொக்கெட் மாதிரி வடிவத்தை அவர் ஒரு பையில் எடுத்து வந்திருந்தார். அதை அவர் கோவில் பட்டர்களிடம் வழங்க அதை ஏழுமலையான் பாதத்தில் வைத்து சிறப்பு பூஜை செய்தனர்.

இந்த றொக்கெட் பிரான்சு மற்றும் ஜப்பான் நாடுகளின் செயற்கை கோள்களை ஏந்தி செல்கிறது. 100 ஆவது றொக்கெட் ஏவப்படும் சாதனை பயணத்தை பிரதமர் மன்மோகன்சிங் நேரில் பார்வையிடுகிறார்.

ஒவ்வொரு வான்வெளி பயணத்துக்கு முன்னரும் ராதாகிருஷ்ணன் திருப்பதி வந்து சாமி தரிசனம் செய்து வருகிறார் என்று கோவில் அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-2)




# ஹக்கானியை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அறிவிப்பு

## மாவோயிஸ்ட்டுக்கு தடைநீக்கம்

பாகிஸ்தானில் செயற்பட்டு வரும் ஹக்கானி அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தானில் செயற்பட்டு வரும் தலிபான்களின் ஒரு பிரிவான பயங்கரவாத அமைப்பு அமெரிக்காவின் நேட்டோ படையினருக்கு பெரும் சவாலாக இருந்து வருகிறது.

இந்த அமைப்பின் தலைவராக ஜலாலுதீன் ஹக்கானி உள்ளார். இந்த அமைப்பு ஆப்கானிஸ்தானில் இந்திய அமெரிக்க தூதரகங்கள் மீது தாக்குதல் நடத்தியது உள்ளிட்ட செயல்களில் ஈடுபட்டு வந்தது.

எனவே ஹக்கானி அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அறிவிக்க வேண்டும் என கோரி கடந்த ஓகஸ்ட் மாதம் முடிவு செய்யப்பட்டு ஜனாதிபதி ஒபாமாவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது.

இந்நிலையில் அமெரிக்க தேசிய குடியேற்ற சட்டத்தின் கீழ்(ஐ.என்.ஏ) தடை செய்யப்பட்ட வெளிநாட்டு பயங்கரவாத தடுப்பு சட்டம் 2012 இன் கீழ் ஹக்கானியின் அமைப்பு பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை நேபாளத்தின் மன்னராட்சி நடந்த போது மாவோஜிஸ்ட்டுக்கள் வன்முறைகளில் ஈடுபட்டதால் இந்த இயக்கத்திற்கு அமெரிக்கா தடை விதித்தது.

தற்போது நேபாளத்தில் மாவோஜிஸ்ட்டுக்கள் பழைய படி எந்த வன்முறையிலும் ஈடுபடுவதில்லை. இதை உன்னிப்பாக கவனித்து வந்த அமெரிக்கா மாவோஜிஸ்ட்டுக்களுக்கு தடையை நீக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சீன பூகம்பத்தில் பலியானோர் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்தது



(பீஜிங்)

சீனாவில் யுன்னான் மற்றும் வெய்னிங் கவுண்டி பகுதியில் பூகம்பம் ஏற்பட்டது. நேற்று முன்தினம் காலை 5.7 ரிக்டர் அளவில் பூகம்பம் ஏற்பட்டது. இதனால் அங்கு வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின.

இதனையடுத்து அப்பகுதியில் சுமார் 20 ஆயிரம் வீடுகள் இடிந்து தரைமட்டமாயின. யுன்னான், கவுண்டி பகுதியில் இடிபாடுகளில் சிக்கி 50 பேர் உயிரிழந்துள்ளதுடன் 150 இற்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்துள்ளனர்.

இந்த நிலையில் தற்போது பூகம்பத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது. 731 பேர் வரை காயம் அடைந்துள்ளனர்.

தென்மேற்கு சீனாவின் யுன்னான் மாகாணம் மலைப்பகுதி நிறைந்தது. அங்கு 6 இடங்களில் வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்துள்ளன. அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அங்கு 90 சதவீத இடங்களுக்கு மீட்பு குழுவினர் சென்றடைந்துள்ளனர். அவர்கள் இடிபாடுகளில் சிக்கிக் கிடப்பவர்களை மீட்டு வருகின்றனர். பூகம்பத்தினால் சுமார் 7 இலட்சத்து 40 ஆயிரம் பேர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

சுமார் 3 ஆயிரம் கோடிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நிவாரண உதவி அளிக்கப்பட்டு வருகிறது. (அ-2)



ரஷ்யாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோ (வலது) வியட்நாம் பிரதமர் டுராங் டான்னை ரஷ்யாவின் கிழக்கு பகுதியான விலாடி வோஸ்டாக் நகரில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு காணியை 41 பேருக்கு விற்று ஏமாற்றிய பெண்

பூகொட ஓவிட்டிகமவிலுள்ள 5.5 ஏக்கர் காணியொன்றை 41பேருக்கு விற்பனை செய்ததாக கூறப்படும் 36 வயதான பெண்ணொருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர். இப்பெண் இந்தியாவுக்கு தப்பிச்சென்று மீண்டும் இலங்கை திரும்பிய நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல வர்த்தகர்கள் ஒரே காணியை 5 மில்லியன் ரூபா வரை கொடுத்து வாங்கியதாக குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மாவட்ட காணி பதிவாளர் அலுவலகத்திலுள்ளவர்களின் உதவியை இப்பெண் பெற்றுள்ளதாக மேற்படி வர்த்தகர்கள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக கம்பஹா பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ-2)



அவுஸ்திரேலியாவில் புகலிடம்கோரி மீன்பிடி படகு மூலம் சட்ட விரோதமாக செல்ல முற்பட்ட இலங்கையர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதை படத்தில் காணலாம்.

# இந்தியா வரும் இலங்கையர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள்

## தமிழக அரசிடம் மன்னிப்புச்சபை கோரிக்கை

(கொழும்பு)

இந்தியாவிற்கு வருகை தருகின்ற இலங்கையை சேர்ந்த சுற்றுலாப்பயணிகள் மற்றும் அங்கு வசித்து வருகின்ற இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு தமிழ்நாட்டு அரசாங்கத்திடம் சர்வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது.

இந்தியாவிற்கு வருகை தருகின்ற இலங்கையை சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் மற்றும் அங்கு வசித்து வருகின்ற இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கையை தமிழ்நாட்டிலுள்ள அதிகாரிகள் உடனடியாக எடுக்க வேண்டும்.

தாக்குதல் தொடர்பில் உடனடியாக விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் நியாயமான விசாரணையை முன்னெடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமெனவும் சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தியப்பிரிவின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஜி.ஆனந்த பத்மநாபன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு சென்ற ஒரு பாடசாலைக்குழு உட்பட 2 கால்பந்தாட்டக் குழுக்களை திருப்பியனுப்புமாறு தமிழ்நாட்டு மாநில அரசாங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டிருந்தது. போட்டியில் விளையாடுவதற்கு அனுமதி வழங்கிய அதிகாரி ஒருவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

யாத்திரிகர்களை ஏற்றிச்சென்ற பஸ்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து பாதுகாப்புக்கருதி தமிழ்நாட்டிற்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு தனது பிரஜைகளுக்கு இலங்கை அரசாங்கம்ஆலோசனைகூறியுள்ளது.

இந்நிலையில் இலங்கையில் தொடருகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் கவலை கொண்டுள்ளன.

இருப்பினும் எங்களுக்கு வேறு விடயங்களில் உள்ள விசனங்களை இலங்கையிலிருந்து வருகின்ற சுற்றுலாப்பயணிகள் மீதோ யாத்திரிகர்கள் மீதோ வன்முறையாக காட்டக்கூடாது.

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின்படி தமிழ்நாட்டுக்கு வருகின்ற ஒவ்வொரு சுற்றுலாப் பயணியும் மதம் மற்றும் வெளிப்பாட்டுச் சுதந்திரம், நடமாடுவதற்கான சுதந்திரம் ஆகியவற்றை அனுபவிப்பதற்கான உரிமை உண்டென்பது தொடர்பில் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வினைத்திறமைகாண் தடை மற்றும் போட்டி பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் வினைத்திறமை காண் தடைப்பரீட்சைகள் எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 2011 ஆம் ஆண்டிற்கான பயிற்சி உத்தியோகத்தர்கள் 2010, 2011 ஆம் ஆண்டிற்கான முன்பள்ளி ஆசிரியர்கள், ஆய்வு உத்தியோகத்தர்களுக்கான 2 ஆம் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையும்,

15, 16 ஆம் திகதிகளில் 2011 ஆம் ஆண்டிற்கான நெசவுப் போதனாசிரியர், தையல் போதனாசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைகளுமே நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அனுமதிஅட்டைகள்கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் 021 2058010 எனும் தொலைபேசி இலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (அ-9)

# இலங்கை படையினர் 450 பேருக்கு இந்தியாவில் பயிற்சியளிக்கப்படுகிறது

## பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி

இந்திய நாடாளுமன்றில் இலங்கை இராணுவம் தொடர்பாக ஏற்பட்ட அமளியை அடுத்து இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி இது தொடர்பாக வாயைத் திறந்துள்ளார்.

தி.மு.க. எம்.பிக்கள் இந்திய நாடாளுமன்றில் இலங்கை இராணுவத்துக்கு இந்தியா பயிற்சி அளிக்கக் கூடாது என்று கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை அடுத்து பாதுகாப்பு அமைச்சர் எழுத்து மூலமான வாக்கு மூலம் ஒன்றை நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ளார்.

இந்தியாவில் இலங்கை இராணுவம் எவரும் இல்லை என்று கூறி வந்த காங்கிரஸ் அரசின் முகத்திரை தற்போது கிழிந்துள்ளது.

பாராளுமன்றில் ஏற்பட்ட அமளியால் இந்தியாவில் எத்தனை இலங்கை இராணுவத்தினர் பயிற்சி பெறுகின்றனர் என்ற விபரத்தை சமர்ப்பிக்க வேண்டும் என சபாநாயகர் கேட்டுக்கொண்டார்.

இதற்கு அமைவாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி ஒரு அறிக்கை சமர்ப்பித்தார். அதில் சுமார் 450 இலங்கை இராணுவத்தினர் தற்சமயம் இந்தியாவில் பயிற்சி எடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய மத்திய அரசுடன் தி.மு.க. கூட்டு வைத்திருந்தாலும் இவ் விடயம் தொடர்பாக அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது பெரும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது. (அ-2)

# பரதநாட்டிய அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளவாலை திருமறைக் கலாமன்ற மாணவியும் நுண்கலை மாணி நாட்டிய கலாவித்தகர் ஸ்ரீமதி சுதர்சினி கரன்சனின் மாணவி டெல்சியா அந்தோனிப்பிள்ளையின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-9)

# கோத்தபாய ராஜபக்ஷ ஒரு மனநோயாளி; விளக்குகிறார் மனோதத்துவ நிபுணர்

(சிட்னி)

இலங்கை பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஒருவித மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கை மருத்துவர் பிரையன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் மைத்துனரான இவர் ஒரு மனோதத்துவ நிபுணர் ஆவார்.

கோத்தபாய ஒருவிதமான மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரையன் தெரிவித்துள்ளார். இதனால் கோத்தபாய மிகவும் ஆத்திரமடைந்து காணப்படுகிறார் என அவரது தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் இன்னும் விடுதலைப் புலிகள் இருப்பதாக இவர் கனவு காண்பதாகவும் புலிகள் ஒரு நாள் மீண்டும் வருவார்கள் என்றும் தற்போது கூட நாட்டில் புலிகள் ஆயுதத்துடன் நடமாடுகின்றார்கள் என்று கூறிவரும் கோத்தபாய ஒரு பிரமையில் இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

புலிகளை அழிக்கிறேன், அழிக்கிறேன் என்று அடிக்கடி கூறிவந்த கோத்தபாய புலிகளை வெற்றி கொண்ட பின்னரும் அவர்களுடன் ஆயுதப் போராட்டம் இன்னமும் நடைபெறுவதாகவும் யார் என்ன கதைத்தாலும் உடனே ஆத்திரமடையும் கோத்தபாய ராஜபக்ஷ தனிமையில் இருந்து எதையோ யோசித்தவாறு ஒவ்வொரு நாட்களையும் நகர்த்துவதாகவும் பாதுகாப்பு படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புலிகள் தம்மை தாக்கக்கூடும் எனவும் தமது குடும்பத்துக்கு இதனால் பல ஆபத்துக்கள் வர இருப்பதாகவும் கோத்தபாய அடிக்கடி [illegible] இலங்கை மீது தாக்குதல் நடத்தி விட்டு செல்ல திட்டமிட்டுள்ளதாக கூறி வான் படையை பலப்படுத்தவும் மற்றும் கடற்படையை பலப்படுத்த வேண்டும் என்றும் இவர் அடிக்கடி கூறி வருவதாக சொல்லப்படுகிறது.

இதுபோன்ற செயற்பாடுகளை வைத்து பார்க்கும் போது கோத்தபாய நிச்சயமாக மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என நிபுணர் பிரையன் செனவிரத்ன கூறியுள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் கோத்தபாய ராஜபக்ஷ மீது நடத்திய தற்கொலை தாக்குதலின் போது தலையில் காயமடைந்த கோத்தபாய மனநிலை பாதிப்புக்குள்ளாகியுள்ளார் என அவரது குடும்ப நண்பர் ஒருவர் கடந்த இரு மாதங்களுக்கு முன் அறிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் அவுஸ்திரேலியாவில் உள்ள ப்ரிமென்ரல் டவுன் ஹோல் வரவேற்பறையில் இலங்கை ஈழம் மனிதவுரிமைகள் பற்றிய நீண்ட கருத்தரங்கொன்றை நிகழ்த்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீவிரமடைந்துவருகின்ற... தமிழக-இலங்கை பனிப்போர்

புதுடெல்லிக்கும் கொழும்புக்குமிடையிலான இராஜதந்திர உறவுகள் சுமுகமான நிலையில் இல்லாத கட்டத்தில் தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் வெளிப்படையானதொரு பனிப்போர் வெடித்துள்ளது.

இந்தப்பனிப்போர் ஒரு மோதல் போலவே உருவெடுத்துவிட்டது. இதன் விளைவாக, தமிழ் நாட்டுக்குச் சென்ற கால்ப்பந்தாட்ட அணிகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

கலைச்சுற்றுலா சென்ற மாணவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். தல யாத்திரை சென்றவர்களையும் சிறப்பு விமானத்தில் திருப்பி அழைக்க நேர்ந்தது.

அதேவேளை, கொழும்பும் இதற்குப் பதிலடியாக தமிழ்நாட்டுக்குச் செல்வது குறித்து பயண எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையில் தோன்றியுள்ள இந்த மோதலை புதுடெல்லி கண்டும் காணாமல் இருப்பதாகவே தோன்றுகிறது.

புதுடெல்லி இந்த விவகாரத்தைச் சரிவரக் கையாளத் தவறியதே, இந்தப் பிரச்சனைக்கு முக்கிய காரணம்.

போர்முடிவுக்கு வந்த பின்னர், இலங்கை அரசுக்கு எதிரான உணர்வுகள் தமிழ்நாட்டில் தீவிரமடைந்தே வந்தன. முன்னர், ஒருசில புலிகள் ஆதரவு அமைப்புகள், கட்சிகளால், நடத்தப்பட்டு வந்த இலங்கை அரசுக்கு எதிரான போராட்டங்கள், தற்போது தமிழ்நாட்டின் அனைத்து கட்சிகளாலும் நடத்தப்படுகின்ற நிலைக்கு மாறியுள்ளது.

இதற்கு இரண்டு தரப்புகள்மீதும் காரணம் கூறப்படுகிறது. ஒன்று இந்திய மத்திய அரசு, இரண்டாவது இலங்கை அரசு. போரில் இறந்த தமிழர்களைப் பாதுகாக்க இந்திய மத்திய அரசு தவறவிட்டது, தமிழர்களின் படுகொலைகளுக்கு இது துணை நின்றது என்ற கருத்து தமிழ் நாட்டில் வலுப்பெற்றுள்ளது.

போர்முடிந்த பின்னரும் இந்திய அரசு தமிழர்களைப் பாதுகாக்க, அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த உறுதியான நடவடிக்கையை எடுக்கவில்லை என்பதும், தமிழக மீனவர்களின் பாதுகாப்பில் அக்கறையற்று இருக்கிறது, இலங்கையுடன் நட்புறவு கொண்டிருக்கிறது என்றும் இந்திய அரசு மீது தமிழக மக்களுக்கு விசனங்கள் உள்ளன.

அதேவேளை, இலங்கை அரசு போர் முடிவுக்கு வந்த பின்னர் தமிழர்களுக்கு நிரந்தரமான, நியாயமான தீர்வு ஒன்றை வழங்கத்தவறியது, தமிழ்நாட்டில் இலங்கை அரசுக்கு எதிரான உணர்வுகள் தீவிரம் பெறுவதற்கு முக்கிய காரணமாகியது.

போர்க்குற்றங்கள் போன்ற விடயங்கள் தமிழக மக்களின் உணர்வுகளில் காயங்களை ஏற்படுத்தியிருந்தாலும், போருக்குப் பின்னர் தமிழர்கள் நன்றாக நடத்தப்பட்டிருந்தால், நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலை ஒன்று உருவாக்ககப்பட்டிருந்தால், தமிழ் நாட்டில் இந்தளவுக்கு இலங்கை எதிர்ப்புணர்வு வலுப்பெற்றிருக்காது.

இந்திய மத்திய அரசும் இலங்கை அரசும் போருக்குப் பிந்திய சூழ்நிலையைக் கையாள்வதில் காட்டிய அலட்சியம், தமிழ் நாட்டை இந்த நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது.


இந்தப் பின்னணியில் இலங்கை சுற்றுலாப் பயணிகள் மற்றும் பிரமுகர்களுக்கு தமிழ் நாட்டில் ஏற்கனவே அச்சுறுத்தல்கள் இருந்தபோதிலும், அது அவ்வளவாகத் தீவிரம் பெறாமல் அடங்கிப்போனது.

ஆனால், குன்னூரில் உள்ள வெலிங்டன் இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றுவரும் இலங்கை இராணுவ அதிகாரிகள் இருவரை வெளியேற்ற வேண்டும் என்ற பிரச்சினைதான் இப்போதைய பனிப்போரின் அடிப்படை.

இலங்கைப் படையினரை இந்தியாவை விட்டே வெளியேற்ற வேண்டும் என்பதே, தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த கோரிக்கையாகவுள்ளது. ஏற்கனவே, தாம்பரம் விமானத் தளத்திலும், குன்னூரிலும் பயிற்சிக்காக வந்த இலங்கைப்படை அதிகாரிகளுக்கு எதிர்ப்புக் கிளம்பியபோது இந்திய மத்திய அரசு அவர்களை வேறு இடங்களுக்கு அனுப்பியது.

ஆனால், இம்முறை மத்திய அரசு மசிந்து கொடுக்கவில்லை. தமிழக முதல்வர் ஜெயலலிதா இரண்டு கடிதங்களை பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு எழுதியும் அதற்குப் பதில் இல்லை.

தமிழகக் கட்சிகள் அனைத்தும் வலியுறுத்தியபோதும் மத்திய அரசு விட்டுக்கொடுப்பதாயில்லை.



கடந்த மாதம் தொடக்கம் வெலிங்டனில் பயிற்சி பெற்றுவரும் இரு இலங்கைப்படை அதிகாரிகளையும், கொழும்புக்கே திருப்பி அனுப்ப வேண்டும் என்பதே தமிழகக் கட்சிகளின் நிலைப்பாடாக உள்ளது.

கொழும்புக்கே திருப்பி அனுப்புவது சிக்கலானது என்ற நிலையில் குறைந்தபட்சம் வேறு மாநிலத்துக்கு அவர்களை அனுப்பி இந்தப் பிரச்சினைக்கு ஆரம்பத்திலேயே முற்றுப்புள்ளி வைத்திருந்திருக்கலாம். ஆனால், அந்த முடிவைக்கூட எடுப்பதற்கு இந்தியமத்திய அரசு மேற்கொள்ளவில்லை.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் முதலாவது கடிதம் அனுப்பப்பட்ட பின்னர், “யார் நிர்ப்பந்தம் கொடுத்தாலும் இலங்கைப் படையினருக்கான பயிற்சிகள் நிறுத்தப்படாது” என்று கூறி எரியும் நெருப்பில் எண்ணெயை வார்த்தார் இந்திய பாதுகாப்பு இணையமைச்சர் பல்லம்ராஜு. அதையடுத்து சினம்கொண்ட தமிழகமுதல்வர் ஜெயலலிதா, இன்னுமொரு காட்டமான கடிதத்தை இந்தியப் பிரதமருக்கு அனுப்பினார். அப்போது அவர் ஈரான் சென்றுவிட்டார்.

இந்த நிலையில், மன்மோகன்சிங் ஈரானில் இருந்து திரும்பியதும் இது பற்றி முடிவு எடுக்கப்படும் என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி உறுதியளித்தார்.

மன்மோகன்சிங் நாடுதிரும்பி பல நாட்களாகியும் வெலிங்டனில் பயிற்சி பெறும் இலங்கைப் படையினரை அங்கிருந்து வெளியேற்றுவது குறித்து எந்தமுடிவையும் எடுக்கவில்லை.

தனது இரண்டு கடிதங்களையும் மத்திய அரசு அலட்சியம் செய்தது, தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு கொதிப்பை ஏற்படுத்தியிருக்கும். தனது பலத்தையும் கோபத்தையும் மத்திய அரசுக்கு வெளிப்படுத்துவதற்கா சந்தர்ப்பம் பார்த்திருந்த அவருக்கு ஒரு சிலநாட்களிலேயே வாய்ப்புக் கிட்டியது ஆச்சரியம்தான்.

றோயல்கல்லூரி மற்றும் இரத்தினபுரி சர்வதேசப் பாடசாலை ஆகியவற்றின் கால்ப்பந்தாட்ட அணிகள் தமிழ் நாட்டில் மேற்கொண்ட சுற்றுப்பயணமே அது.

இரு கால்பந்தாட்ட அணிகளையும் உடனடியாக தமிழ் நாட்டில் இருந்து வெளியேற்ற உத்தரவிட்டார் தமிழக முதல்வர் ஜெயலலிதா. இது நியாயமற்றதொரு நடவடிக்கை என்பதை அவரால் உணராமல் இருந்திருக்க முடியாது. ஆனால், சந்தர்ப்பம் அவரை அத்தகையதொரு முடிவை எடுக்கத்துண்டியது.

அதாவது, தன்னையும் தமிழ்நாட்டின் உணர்வுகளையும் அலட்சியப்படுத்தும் மத்திய அரசுக்கு கடுமையானதொரு செய்தியை சொல்ல அவர் முற்பட்டார்.

இந்திய சமஷ்டி அரசியலமைப்பின்படி, ஒரு மாநில முதல்வரான அவரால் அதைத்தான் செய்ய முடிந்தது. அதாவது இலங்கைப் படையினருக்குப் பதிலாக விளையாட்டு வீரர்களை வெளியேற்றினார்.

இலங்கை படையினரை வெலிங்டனில் இருந்து வேறு இடத்துக்கு அனுப்பியிருந்தால், இத்தகைய முடிவை தமிழக முதல்வர் ஜெயலலிதா ஒரு போதும் எடுத்திருக்கமாட்டார்.

இந்தக் கூட்டத்தில், ஏற்கனவே இலங்கை அரசுக்கு எதிரான போராட்டங்களை நடத்தி வந்தவர்களுக்கு, இன்னும் வசதியாகிப்போனது.

ஜெயலலிதா கொடுத்த ஊக்கம், வேளாங்கண்ணிக்கு தல யாத்திரை சென்ற சுற்றுலாப் பயணிகள மீதான கோபமாகத் திரும்பியது. இந்த நிலையில்தான் இலங்கை அரசு பயண எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட்டது. இதன் விளைவாக மிகின்லங்கா விமானத்தை இரவோடிரவாக அனுப்பி அத்தனைபேரையும் அழத்துவர வேண்டிய நிலை இலங்கை அரசுக்கு ஏற்பட்டது.

இதன்பின்னர்இலங்கை சுற்றுலாப் பயணகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்திய மத்திய அரசுகூறிய போதிலும், அது நிரந்தரப்பாதுகாப்புக்கான நடவடிக்கையாகத் தெரியவில்லை..

**சஞ்சயன்**

தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையிலான இந்தப்பனிப்போரை தணிக்காமல், கொதிநிலையில் வைத்திருக்க மத்திய அரசு ஏன் விரும்புகிறது என்ற கேள்வி எழாமல் இல்லை.

ஏற்கனவே கொழும்புடன் சுமுக உறவு இல்லாத நிலையில் கொழும்பை மடக்குவதற்கான ஒரு வாய்ப்பாக இதனைப்பயன்படுத்த புதுடெல்லி முனைகிறதா? என்ற சந்தேகமும் சிலரிடம் உள்ளது.

இந்தப் பனிப்போர் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகப்பொருளாதார உறவுகளில் பலத்ததாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. இலங்கைக்கு அதிக பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

இதனால், எப்படியாவது தமிழ் நாட்டுடனான உறவுகள் மேலும் சீரழியாமல் பாதுகாக்கவே அரசாங்கம் முனையும்.

ஆனால், இந்தக்கட்டத்தில் பிரச்சினையை தணிக்க இலங்கையால் ஆகக்கூடிய காரியம் ஒன்றுமில்லை. ஏனென்றால் அதற்கான கடிவாளம், இப்போது இருப்பது இந்திய மத்திய அரசிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MMBL **Money Master**

Company Registration No.P.V 986

வவுனியா, புதுக்குடியிருப்பைத் தொடர்ந்து

# கிளிநொச்சியிலும்

WESTERN UNION


மணி டிரான்ஸ்பர்


**சிறப்பான சேவையாற்றிக் கொண்டிருக்கிறது கோபி ஏஜென்சி.**

வேகமாகவும் இலகுவாகவும் பாதுகாப்பாகவும்

**வெஸ்டர்ன் யூனியன் மூலம் உலகெங்கும் இருந்து அனுப்பும் பணத்தினை ஒரு சில நிமிடங்களில் கோபி ஏஜென்சியில் பெற்றுக்கொள்ளலாம்**

**வெஸ்டர்ன் யூனியனால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது கிளிநொச்சி மற்றும் அதனை அண்மித்த பகுதி மக்களுக்காக!**







நம்பிக்கை! நாணயம்! பாதுகாப்பு!

# கோபி ஏஜென்சி

இல.355, A 9 வீதி, கிளிநொச்சி. (கிளிநொச்சி கந்தசாமி கோவில் அருகாமை)

- பல வருடங்களாக வெஸ்டர்ன் யூனியன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பணப்பரிமாற்றம் சேவையினை வழங்கி வருகின்றோம்.
- வெளிநாட்டிலிருந்து 10 இலக்கங்கள் கிடைத்த உடனேயே கோபி ஏஜென்சியை நாடுங்கள்.
- ஒரு சில நிமிடங்களில் பணத்தினை பெற்று வீடு செல்லலாம்.
- விடுமுறை நாட்களிலும் திறந்திருக்கும் (ஞாயிறு தவிர்ந்த)

(#996)

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:- 021 2283999, Fax 0212283998**

அலுவலக நேரம்: திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தலைமைக்காரியாலயம் **கோபி ஏஜென்சி** கிளைக்காரியாலயம்

33,மில் வீதி, வவுனியா
024 2225888/024 2222411

WESTERN UNION MONEY TRANSFER

பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு சந்தி,
புதுக்குடியிருப்பு
0243248979, 0777343300

WESTERN UNION

வெஸ்டர்ன் யூனியனின் பிரதான முகவர் MMBL மணி டிரான்ஸ்பர்
பிறைவேட் லிமிட்டட் 7 ஆம் மாடி, எய்ட்கென் ஸ்பென்ஸ் டவர்-II
இல.315,வொக்சோல் வீதி கொழும்பு-02. உடனு அழைப்பிற்கு-0115529999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

214

## நரியின் உபாயம்

அந்தப் பெரிய ஆலமரத்தில் இரண்டு காகங்கள் தங்கள் குஞ்சுகளுடன் சந்தோசமாக வாழ்ந்து வந்தன. ஒருநாள் நல்லபாம்பு ஒன்று அந்த ஆலமரத்திலிருந்த ஒரு பொந்தில் வந்து வசிக்க ஆரம்பித்தது. பாம்பு அந்த மரத்தில் வசிப்பது காகங்களுக்குப் பிடிக்கவில்லை.

இந்த சமயத்தில் பெண் காகம் முட்டையிட்டது. சிலகாலம் கழித்து முட்டையிலிருந்து குஞ்சுகள் வந்தன.


ஒருநாள் தந்தைக்காகமும் தாய்க்காகமும் உணவைத்தேடி வெளியே சென்றன. அந்தச் சமயம் பார்த்து பாம்பு அந்தக் குஞ்சுக் காகங்களைப் பிடித்துத் தின்று விட்டுச் சென்றுவிட்டது.

தங்கள் கூட்டுக்குத் திரும்பிய இரண்டு காகங்களும் தங்கள் குஞ்சுகள் காணாமல் போய்விட்டதையறிந்து கவலையடைந்து தேடின. மற்றைய பறவைகளுக்கும் தெரியவில்லை.

இப்படியே சில காலம் சென்றது. பெண்காகம் மீண்டும் முட்டையிட்டுக்குஞ்சு பொரித்தது. இந்தமுறை இரண்டுகாகங்களும் கவனமாக மாறிமாறி தங்கள் குஞ்சுகளைக் காவல் காத்தன.

அன்று அந்தப்பாம்பு காகத்தின் குஞ்சுகளைப்பிடித்துச் சாப்பிட வந்தது. இதைக்கவனித்த தாய்க்காகம் கூச்சல்போட்டு உதவிக்கு அழைத்தது. ஆனால் அதற்குள் அந்தப்பாம்பு குஞ்சுகளைப்பிடித்துத் தின்றுவிட்டு சென்றுவிட்டது.

விடயத்தைக் கேள்விப்பட்ட ஏனைய காகங்கள் எல்லாம்



ஒன்றாய்ச்சேர்ந்து அந்தப்பாம்பைத் தாக்கமுயன்றன. ஆனால் பாவம் அவைகளால் அந்தப்பாம்பை எதுவும் செய்யமுடியவில்லை. அந்த இரு காகங்களும் பாம்பைத் துரத்த என்னசெய்யலாம் என யோசித்தன. கடைசியில் தன் நண்பனான நரியிடம் யோசனை கேட்கலாமென்று இரண்டு காகங்களும் முடிவு செய்து நரியைச் சந்தித்தன.

நரி யோசித்து ஒரு உபாயத்தைச் சொல்லியது. அரண்மனையிலிருந்து ராணியும் மற்றவர்களும் தினமும் நதிக்கரைக்கு வருவார்கள். அப்போது அவர்கள் தங்கள் விலையுயர்ந்த நகைகளை நதிக்கரையில் கழற்றி வைத்து குளிப்பார்கள். காவற்காரர்கள் சற்றுத் தொலைவில் நின்று கொண்டு அந்த நகைகளை காவல் காப்பார்கள். நீ அந்த நகைகளில் விலையுயர்ந்த ஒன்றை எடுத்துக் கொண்டு அந்த காவற்காரர்களின் கண்களில் படுமாறு பறந்து செல். இதைப்பார்த்த காவற்காரர்கள் அந்த நகையை உன்னிடமிருந்து கைப்பற்ற துரத்திக் கொண்டு வருவார்கள். நீ அந்த நகையை எடுத்துச் சென்று அந்தப் பாம்பு வசிக்கும் பொந்தில் போட்டு விடு. அத்துடன் அந்தப்பாம்பின் கதை முடிந்துவிடும்.

நரிக்கு நன்றி சொல்லிவிட்டுப் புறப்பட்ட இரண்டு காகங்களும் அடுத்தநாள் நதிக்கரைக்குச் சென்றன. ராணியின் முத்துமாலை ஒன்றை எடுத்துக்கொண்டு ஒரு காகம் பறந்தது. மற்றொரு காகம் கத்த ஆரம்பித்தது. இதைக் கவனித்த காவற்காரர்கள் அந்தக் காகத்தைத் துரத்த ஆரம்பித்தார்கள்.

காகம் நரி சொன்னபடியே அந்தமுத்துமாலையை பாம்பின் பொந்திற்குள் போட்டுவிட்டுப் பறந்து சென்றது.

காவற்காரர்கள் ஒரு கொம்பை நுழைத்து அந்தமுத்துமாலையை எடுக்கமுயன்றார்கள். உள்ளேயிருந்தபாம்பு சீறிக்கொண்டு வெளியே வந்தது. காவற்காரர்கள் அந்தப்பாம்பை அடித்துக் கொன்றார்கள்.

அந்தக்கொடிய பாம்பின் கதை நரியின் யோசனையால் முடிந்தது.

அந்த இரு காகங்களும் மகிழ்ச்சியாய் தங்கள் கூட்டில் வசிக்க ஆரம்பித்தன.

## பணக்காரனின் தோட்டம்

ஒரு பணக்காரனுக்குப் பெரிய மாந்தோப்பு இருந்தது. அந்தப் பகுதியிலேயே மிகச்சுவையான மாம்பழங்கள் அந்தத்தோட்டத்தில் தான் விளைந்தன. அந்தத் தோட்டத்தின் பக்கம் செல்பவர்கள் அந்த மாம்பழங்களைப் பறித்துச்சாப்பிட்டனர். இதைக் கவனித்த அந்தப் பணக்காரன் தோட்டத்தைக் காவல் காக்க ஓர் ஆளை நியமித்தான்.

அந்தப் பணக்காரன் ஒரு கருமி. அந்தக் காவற்காரனுக்கு மிகவும் குறைவான சம்பளத்தைக் கொடுத்தான். அந்தச் சம்பளம் அந்தக் காவற்காரனுக்குப் போதவில்லை. எனவே அவன் தோப்பிலிருந்து நல்ல சுவையான மாம்பழங்களைப் பறித்துச் சாப்பிட்டுப் பசியைப் போக்கிக்கொண்டான். மேலும் அவ்வப்போது பழங்களைத் திருடிவிற்றுப் பணத்தைச் சம்பாதித்தான்.

இது அந்தப் பணக்காரனுக்குத் தெரிந்துவிட்டது. உடனே அந்தக் காவற்காரனை வேலையிலிருந்து நிறுத்திவிட்டு தன் மனைவியிடம் இதைப்பற்றிச் சொன்னான்.

அந்த வேலைக்காரனுக்குச் சரியான சம்பளம் குடுத்தா அவன் திருடமாட்டாங்க. தப்பு உங்கமேல தாங்க என்றாள் மனைவி.

ஆனால் பணக்காரன் இதை ஒப்புக்கொள்ளவில்லை. அவன் வேறொரு காவற்காரனை நியமித்தான். அவனும் இதே திருட்டுத் தனத்தைச் செய்தான்.

இப்போதும் பணக்காரனின் மனைவி காவற்காரனுக்குச் சரியான சம்பளத்தைத் தந்தால் திருடமாட்டான் என்று சொன்னாள்.

ஆம்பிளை காவற்காரப்பசங்க தான் இப்படி. ஒரு பொம்பளையை காவலுக்குப்போட்டா அவ நிச்சயம் திருடமாட்டா என்றான் பணக்காரன்.

ஒரு பெண்ணைக் காவலுக்கு நியமித்து அவளுக்கும் அதே சொற்பச் சம்பளத்தைத் தருவதாய்ச் சொன்னான்.


ஆனால் அந்தப்பெண்ணும் சம்பளம் போதாமல் பழங்களைத் திருடிவிற்க ஆரம்பித்தாள்.

இப்போது பணக்காரன் அந்தப் பெண்ணையும் காவல் வேலையிலிருந்து நிறுத்திவிட்டு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து யோசித்தான்.

அப்போது அந்த வழியாக ஒரு குருடனும் நொண்டியும் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் அந்தப் பணக்காரனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது.

குருடனால் பார்க்கமுடியாது. நொண்டியால் நடக்கமுடியாது. எனவே இருவராலும் பழங்களைத் திருடமுடியாது என்று நினைத்து இருவரையும் தன் தோட்டத்தில் காவற்காரர்களாக நியமிக்கலாம் என்று முடிவு செய்தான். இருவரையும் அழைத்துப்பேசினான். இந்த இருவரும் பணக்காரன் சொன்ன சொற்ப சம்பளத்திற்கு காவல்காக்க ஒப்புக்கொண்டு வேலைக்குச் சேர்ந்தார்கள்.

சிலகாலம் சென்றது. இருவருக்கும் சம்பளம் போதவில்லை.



மாம்பழ வாசனை மூக்கைத் துளைத்தது. குருடன் நொண்டியிடம் சொன்னான்.

டேய் மாம்பழம் வாசனையா இருக்கு. எனக்கும் பசிக்குது. பழத்தைப் பறிச்சி சாப்பிடலாமா?

உனக்கு கண்ணு தெரியாது. என்னால நடக்கமுடியாது. நாம எப்படி பழத்தைப் பறிக்கமுடியும்?

ஏன்முடியாது. எனக்கு கால் இருக்கு. உனக்கு கண் இருக்கே. நீ என் தோள் மேல உட்கார்ந்துக்க. எனக்கு வழியைச் சொல்லு. உன்னை அங்கே தூக்கிக்கிட்டுப் போறேன். நீ பழங்களைப் பறிச்சிக் கீழேபோடு. ரெண்டு பேரும் சாப்பிடலாம். மீதி இருந்தா யாருக்காவது வித்துடலாம். நம்ம முதலாளி குடுக்கிற சம்பளம் போதமாட்டேங்குது.

இருவரும் ஒன்று சேர்ந்து பழங்களைப் பறித்துச் சாப்பிட்டார்கள். மீதமிருந்ததை நல்ல விலைக்கு விற்றார்கள்.

இந்த விஷயம் பணக்காரனுக்குத் தெரிந்து அவர்களையும் வேலையிலிருந்து நிறுத்திவிட்டான்.

இன்று தன் மனைவியிடம் இது பற்றிப்பேசினான். நீ சொன்னது சரிதான். குடுக்குற சம்பளம் போதலைன்னா திருடத்தான் செய்வாங்க.

அந்தப் பணக்காரன் தன் மனைவி சொன்னதை ஒப்புக்கொண்டான்.

ஆனாலும் அவன் நிறையச் சம்பளம் கொடுத்து காவற்காரனை நியமிக்க விரும்பவில்லை. அதனால் தன் தோட்டத்தை அவனே காவல் காக்க ஆரம்பித்தான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சங்ககிரி அருகே வாகன விபத்து! மூன்று பேர் பலி; 17 பேர் காயம்



(சேலம்)

சங்ககிரி அருகே நடந்த விபத்தில் கல்லூரி மாணவி உட்பட 3 பேர் உயிரிழந்துள்ளனர். காயம் அடைந்த 17 பேரும் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர்.

சேலத்தில் இருந்து ஈரோடு நோக்கிச் சென்ற தனியார் பேருந்தும் ஈரோட்டில் இருந்து சேலம் நோக்கி வந்த அரச பேருந்தும் சங்ககிரி அருகே உள்ள ஊஞ்சம்பாளையம் வசந்தம் காலனியில் நேருக்கு நேர் மோதி விபத்தானது. இதில் அரச பேருந்துச் சாரதி உட்பட பயணி ஒருவரும் சம்பவ இடத்திலேயே பலியானார்கள்.

விபத்தில் பேருந்தில் பயணித்த 40 இற்கும் மேற்பட்ட பயணிகள் சிறிய மற்றும் பலத்த காயமடைந்தனர். இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் காயம் அடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். (அ-2)

# இலங்கையிலிருந்து வருபவர்களை நட்பு ரீதியாக அணுக வேண்டும்

## மார்க்சிஸ்ட் கட்சி தெரிவிப்பு

இலங்கையில் இருந்து இந்தியா வருபவர்களை நட்பு ரீதியிலேயே அணுக வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்குழு உறுப்பினர் பிரகாஷ் காரத் தெரிவித்துள்ளார். மதுரையில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார். இலங்கையில் இருந்து வழிபாட்டுக்காக வந்தவர்கள் மீது தாக்குதல் நடத்துவது துரதிர்ஷ்டவசமானதும் கண்டிக்கதக்க விடயமுமாகும்.

தமிழகம் மற்றும் இலங்கையில் வசிக்கும் மக்கள் நட்புடனும் நல்லிணக்கத்துடனும் இருக்க வேண்டும். இலங்கையில் இருந்து வருபவர்களை நட்பு ரீதியிலேயே அணுக வேண்டும். இலங்கை தமிழர்கள் பிரச்சினையில் அரசுகளுக்கு இடையே தான் பேச்சு நடைபெற வேண்டும். இருநாட்டு மக்களும் மோதிக்கொள்வது ஏற்புடையதல்ல என்றும் பிரகாஷ் காரத் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# மாணவர் பிரச்சினை ஊர்ப்பிரச்சினையானது

(முசாபர்நகர்)

உத்தர பிரதேச மாநிலம் சஹாரன் பூர் மாவட்டம் சந்டேலா கோலி என்ற கிராமத்தில் தலித் மற்றம் ஜாட் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களி டையே கடும் மோதல் ஏற்பட்டது. இதில் 20 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

வகுப்பறையில் இடம்பிடிப்பதில் வாக்குவாதம் ஏற்பட்டு அதன் பின் னர் ஊருக்குச் சென்றதும் இப்பிரச்சினை மீண்டும் வெடித்தது.

அப்போது அவர்களின் உறவினர்களும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட தால் மோதல் வெடித்துள்ளது. இரு தரப்பினரும் ஒருவரையொருவர் கற்களால் தாக்கினர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

இதையடுத்து அங்கு ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருவதாக துணை கோட்ட நீதிபதி ராஜேஷ்குமார் தெரிவித்தார். (அ-2)


பிரெஞ்சு மொழிக் கற்கைக்கு

யாழில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு உத்தியோக பூர்வ FRENCH நிறுவனம்

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

**யாழ்- பிரெஞ்சு நட்புறவுக் கழகம்**

**The Only Official French Language Centre in Jaffna**

**பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்**

❋ France இன் Paris நகரில் உள்ள தலைமை நிறுவனமாகிய "Alliance Francaise de Paris" ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு உத்தியோக பூர்வ பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் "Alliance Francaise de Jaffna" மட்டுமே.

❋ உலகில் 136 நாடுகளில் 1040 Alliances Francaises உள்ளன. இலங்கையில் KOTTE, KANDY, JAFFNA, MATARA ஆகிய இடங்களில் மாத்திரமே உள்ளன. (France Embassy Website- *www.ambafrance-lk.org*)

❋ சர்வதேச தரம் வாய்ந்த இந்நிறுவனத்தில் France மற்றும் French பேசப்படும் நாடுகளுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.

✦ ஒவ்வொருவரிடமும் Listening, speaking, reading & writinig ஆகிய திறமைகள் சோதிக்கப் படுகின்றன.

✦ 6 மாத கற்கைநெறியின் (BASICS 100 HOURS) முடிவில் பரீட்சை நடாத்தப்பட்டு தரமான CERTIFICATE வழங்கப்படுகின்றது. 6 மாதத்தினை பூர்த்தி செய்ய முடியாவிட்டால் கடிதம் ஒன்றை பெற்றுக் கொள்ளலாம்.

✦ அதன் பின்னர் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஐரோப்பிய பரீட்சைகளான DELF, DALF பரீட்சைகளுக்கு குறைந்த கட்டணத்தில் எமது நிறுவனத்தினூடாக மட்டுமே அனுமதிகளை பெற முடியும்.

**வகுப்புக்கள்:- சனி, ஞாயிறுகளில்.....**

**புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.**

(372) வடமாகாணத்தில் தனியொரு முகவரி:

**61,Kachcheri- Nallur Road, Jaffna. TP No:- 021 222 8093/ நேரில் வரலாம்.**

*E-mail: alliancejaffna@yahoo.com*

(றக்கா வீதியும் கச்சேரி- நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடம்)



- தபால் மூலம் -

**ஆறு மாத கால டிப்ளோமா**

**Course Length - Six Month**

22 வருட அனுபவம்

September 2012 to February 2013

**தமிழ் மொழி மூலம்**

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

● கல்முனை ● மட்டக்களப்பு ● திருகோணமலை ● புத்தளம் ● வவுனியா ● மன்னார் ● யாழ்ப்பாணம் ● கண்டி ● கொழும்பு ● ஹட்டன் ● அனுராதபுரம் ● நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

(அ-999)

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

**MARUTHUR . A. HASSEN**

*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**

24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.

Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org

Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2012



**ஒரு மணித்தியாலத்தில் கொழும்பில்!**

- தினமும் கொழும்பிற்கான விமான சேவைகள்
- இணையத்தளத்தின் ஊடாக பதிவு செய்யலாம்
- எக்ஸ்போ எயார் நிர்வகிக்கும் தங்குமிட வசதிகளுடன் கூடிய யாழ்ப்பாண சுற்றுலா ஒழுங்கமைப்பு

மேலதிக சேவைகள்

- யாழ்ப்பாணத்திற்கான சுற்றுலா ஒழுங்கமைப்பு
- யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து வசதிகள்
- எக்ஸ்போ எயார் நிர்வகிக்கும் தங்குமிடவசதிகள்

**EXPOAIR**

*your friend in the skies...*







**EXPO AVIATION (PVT) LTD.**

No 141 F, Palaly Road, Thirunelvely, Jaffna.

Tel: +94 21 2223891/2223790

Fax : +94 21 2226297 - Mobile : 0773 788795

Email : jaffna@expoavi.com - Website: www.expoavi.com

(அ/998)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக்கிழக்கில் சீனாவின் ஆதரவுடன் படை முகாம்கள்

## யாத்திரிகர்கள் மீதான தாக்குதலுக்கு இதுவே காரணம்- சுரேஷ் எம்.பி.

தமிழ் நாட்டிற்குச் சென்ற இலங்கை யாத்திரிகர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் ஒரு துரதிர்ஷ்டமானது. அதனை ஏற்றுக் கொள்ளவும் முடியாது என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு,

தமிழ் நாட்டுக்குச் சென்ற இலங்கை யாத்திரிகர்கள் தமிழக மக்களால் தாக்கப்பட்டமையானது பல்வேறுபட்ட சர்ச்சைகளை உருவாக்கியிருக்கின்றது.

அப்பாவி மக்கள் அவர்கள் எத்தரப்பினராக இருந்தாலும் தாக்கப்படுவது அங்கீகரிக்கப்பட முடியாததும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததுமாகும்.

ஆனால், இந்த நிலை ஏன் தோன்றியது என்பதே இங்கு முக்கியமானது. யுத்தம் முடிந்து மூன்றாண்டுகளின் பின்னரும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். நிரந்தர இராணுவ குடியிருப்புக்கள், நவீன மயப்படுத்தப்பட்ட இராணுவ முகாம்கள் என்பவை சீன உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களின் நிலங்கள் இராணுவத்தினரால் கபளீகரம் செய்யப்படுகின்றது. தமிழ் மக்களின் நிலங்களில் சிங்கள இராணுவம் விவசாயம் செய்வதுடன் அந்த மக்கள் மீளக்குடியேறுவதையும் மறுதலித்து வருகின்றது.

தமிழ் மக்கள் தொடர்ந்தும் துன்புறுத்தப்படுகின்றனர். இவ்வாறான துன்புறுத்தல்களைப் பார்க்கக்கூடிய கேட்கக்கூடிய யாவரும் சிங்கள அரசாங்கத்தின்மேல் ஆத்திரமும் கோபமும் கொள்வது இயற்கையே.

அந்த ஆத்திரத்தின் வெளிப்பாடுதான் யாத்திரிகர்கள் தாக்கப்பட்டமை என்பதை இலங்கை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். தமிழகத்திற்கு வந்திருந்த இலங்கை உதைபந்தாட்டக்குழு திருப்பி அனுப்பப்பட்டதானது அதன் ஒரு பகுதி என்பதை இலங்கை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.

டில்லி அரசாங்கம் பொருளாதாரத் தடைகளையோ ஏனைய தடைகளையோ கொண்டு வரத் தவறினாலும் கூட தமிழக மாநில அரசு இலங்கை இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் அக்கறையாய் இருப்பது புரிந்து கொள்ளக்கூடியது.

தமிழகத்தில் ஏதும் நேர்ந்தால் இங்குள்ள இந்தியத் தமிழருக்கு பாரதூரமான பின் விளைவுகள் ஏற்படுமென அச்சுறுத்துவது விமல் வீரவன்ச போன்றவர்களுடைய முட்டாள்தனமான சிந்தனைகளேயன்றி ஆரோக்கியமான சிந்தனை அல்ல.

இலங்கை அரசின் எதிர்கால செயற்பாடுகளில்தான் இந்திய- இலங்கை நல்லுறவும் தமிழகத்துடனான நல்லுறவும் தங்கியுள்ளது என்று அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# கடந்த ஜனாதிபதி தேர்தல் முடிபுகளில் குளறுபடிகள் உண்டு

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது முடிபுகள் அறிவிக்கப்பட்ட வேளையில்,

ஜனாதிபதியின் சகோதரர்களான கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோர் தேர்தல்கள் செயலகத்தில் இருந்ததாக அமெரிக்கத்தூதரகம் வோசிங்டனுக்கு தகவல் அனுப்பியுள்ளது.

விக்கிலீக்ஸ் தகவலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவை கோடிட்டு அமெரிகத் தூதரகம் இந்தத் தகவலை இராஜாங்க திணைக்களத்துக்கு அனுப்பியுள்ளது.

தமக்கு கிடைத்த சில தேர்தல் திணைக்கள முடிவுத்தாள்களில் உள்ள வாக்கு எண்ணிக்கையையும் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளால் அனுப்பப்பட்ட தாள்களில் உள்ள வாக்கு எண்ணிக்கையும் ஒப்பிடும் போது அவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.

அதேநேரம் தேர்தல்கள் திணைக்களத்தில் குறித்த தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட வேளையில் கோத்தபாய ராஜபக்ஷவும் பசில் ராஜபக்ஷவும் தேர்தல்கள் திணைக்களத்தில் இருந்தமை தெரிய வந்தாக மங்கள சமரவீர குறிப்பிட்டதாக அமெரிக்கத் தூதரகம் தகவல் அனுப்பியுள்ளது.

இதனிடையே 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி 2 ஆம் திகதி அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுடன் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரம சிங்க, ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க ஆகியோர் நடத்திய கலந்துரையாடலில் ஜனாதிபதி தேர்தலில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தினார்.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தல் மோசடிகள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தாலும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு உயர் நீதிமன்றத்தில் பல நண்பர்கள் இருப்பதால் அது சாத்தியமாகாது என்று மங்கள சமரவீர குறிப்பிட்டதாக அப்போதைய அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினீசினால் இராஜாங்க திணைக்களத்துக்கு அறிவித்துள்ளதாகவும் விக்கிலீக்ஸில் தகவல் வெளியாகியுள்ளது. (அ-2)



கிளிநொச்சி, வட்டக்கச்சி மாயவனூர் ஸ்ரீரங்கநாதப் பெருமாள் ஆலய தேர் உற்சவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இவ்வுற்சவத்தில் சுவாமி தேரில் ஆரோகணிக்கச் செல்வதைப் படத்தில் காணலாம்.

# புலிக்கொடி காட்டிய விவகாரம் தொடர்பில் நபர்கள் அடையாளம் காணப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நெல்லியடி ஆர்ப்பரட்டத்தின்போது புலிக்கொடி காட்டியவர்களின் வாகனங்களின் இலகத்தகடுகள் யாருடையது? என இனங் காணப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

இவ்வாகனங்களின் உரிமையாளர்கள் அடுத்த மாதம் 12 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

குறித்த ஆர்ப்பாட்டத்தின் போது இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத இளைஞர்கள் அங்கு புலிக்கொடியினை பொலிஸாரின் முன்னிலையிலும் காட்டியவாறு பொலிஸாரின் எதிர்ப்பின்றி மாயமாக மறைந்தனர்.

இவர்களின் மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடுகள் அங்கு நின்றவர்களால் குறிக்கப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றிற்கு ஒப்படைக்கப்பட்டது.

பருத்தித்துறை நீதிமன்றம் அவ் இலக்கத்தகடுகளின் இலக்கங்களை பொலிஸாரிடம் ஒப்படைத்து உரிய விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டதில் குறித்த இலக்கத்தகடுகளில் ஒன்று கொழும்பு 15 இனைச் சேர்ந்த சிங்களவருடைய ஆட்டோ இலக்கம் என்றும் மற்றையது ஜாஎல பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் நபரொருவருடைய மோட்டார் சைக்கிளின் இலக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்விருவரது குறித்த வழக்கு அடுத்த மாதம் 12 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (அ-4)

# குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்

## மாநகரசபை துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி வடமாகாணத்து மக்களையும் வாட்டி வதைத்துக் கொண்டு இருக்கின்றது. குடாநாட்டில் பல பிரதேசங்களில். மக்கள் குடிநீருக்காக அலைந்து திரிகின்றனர். இந்நிலையில் குடிநீர் விநியோகத்தில் வீண் விரயத்தை தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக யாழ். மாநகர சபையினால் விடுவிக்கப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் குடிநீர் வளம் குறைவாக இருப்பதனால் குடிநீர் விநியோகத்தில் வீண் விரயத்தை பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

மேலும் குடிநீர் விநியோகத்தை குடிநீராக மட்டும் பயன்படுத்துங்கள் எனவும் அயலவர்களுக்கும் குடிநீர் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள். குடிநீர் வீண் விரயமாகும். நீர்க்குழாய், நிலத்தடி குழாய் பற்றி யாழ். மாநகர சபையின் நீர் வேலைப் பகுதிக்கு அறிவியுங்கள் என அந்த துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)


## அழகுக்கலை பயிற்சி

ஒறிபிளேம் நிறுவனத்தால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் அழகுக்கலை பயிற்சிகள் பல பேரின் வேண்டுகோளுக்கிணங்க தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதன் புதிய வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பிக்கின்றன.

கீழ்வரும் பயிற்சிகள் நடைபெறுகின்றன

| | | |
|---|---|---|
| பேஷியல் | முக ஒப்பனை | சிகை அலங்காரம் |
| கோல்ட் பேஷியல் | கை பராமரிப்பு | இமை சீர் செய்தல் |
| கால் பராமரிப்பு | | |

பயிற்சிக் கட்டணம் ரூபா 6500/= மட்டுமே (செயல்முறை பயிற்சிக்குரிய உற்பத்திப் பொருட்கள் இலவசமாக வழங்கப்படும்)

பயிற்சியின் முடிவில் சர்வதே சான்றிதழ்கள் வழங்கப்படும். அறிமுக வகுப்பில் கலந்து கொண்டு உங்களது பதிவுகளை மேற்கொள்ளலாம்.

திகதி:-11.09.2012, நேரம்:-10.00 மணி, இடம்:-யாழ். கிளை நிறுவனம் (187/30, யூனியன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்)

முக்கிய குறிப்பு:- மூன்று நண்பர்களை அழைத்து வருபவர்களுக்கு பரிசு காத்திருக்கின்றது.

தொடர்புகளுக்கு: 0772288243/0771336124/0215888001 (384)


# பிரதமர் பதவிக்காக ஏழு பெயர்கள் பரிசீலிப்பு

## அரசாங்கம் தெரிவிப்பு

பிரதமர் டி.எம்.ஜயரத்ன உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதால் பிரதமர் பதவியில் வேறு ஒருவரை நியமிப்பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

இதனடிப்படையில் அடுத்து மேற்கொள்ளப்படவுள்ள அமைச்சரவை மாற்றத்தின்போது பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதுடன் அந்த பதவிக்காக 7 பேரின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா, தினேஷ் குணவர்த்தன, டியூ.குணசேகர, ஜீ.எல்.பீரிஸ், ரத்னசிறி விக்ரமநாயக்க ஆகியோரின் பெயர்களே பரிசீலணையில் இருப்பதாக தெரியவருகிறது.

பிரதமராக சமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டால் சபாநாயகராக நிமால் சிறிபால டி சில்வா நியமிக்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழுகிற மாடு உள்ளூருக்குள் உழும்.
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## கண்ணைக்கட்டிக் கப்பல் ஏறும் எனதருமைச் சகோதரர்களே!

ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு அவர்கள் ஒரு கூட்டத்தில் உரையாற்றுகையில், தமிழ் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதை தடுக்க வேண்டும். எனினும் துரதிர்ஷ்டவசமாக நம்மவர்கள் வெளிநாடுகளுக்கு ஓடுகிறார்கள்.

இதற்குப் பல காரணங்களைக் கூறினாலும் எங்கள் பிள்ளைகள் புட்டிப்பாலை பருகி வளர்ந்ததனால் புட்டிப்பாலின் தாய்ப்பசு இருக்கும் அவுஸ்திரேலியாவை நோக்கி ஓடுகிறார்கள்.

எனவே எங்கள் தாய்மார் தங்கள் குழந்தைகளுக்கு புட்டிப்பால் கொடுப்பதை தவிர்த்து தாய்ப்பாலைக் கொடுக்கவேண்டும். அப்போதுதான் தாய் மண், தாய்ப்பாசம் என்பன பிள்ளைகளிடம் ஏற்படும் என்று கூறினார்.

நகைச்சுவை நயத்தோடு அவர் இதனைக் கூறியிருந்தாலும், இன்று நடைமுறையில் எங்கள் பிள்ளைகள் கண்ணைக்கட்டிக் கப்பல் ஏறி அவுஸ்திரேலியாவுக்குச் செல்கின்ற செய்திகளை பார்க்கும் போது எங்கள் இதயங்கள் மட்டுமல்ல, தாயகக் கனவுகளோடு கல்லறைகளில் துயில் கொள்வோரும் இறப்பிலும் காணாத துயரை அடைவர் என்றே கூற வேண்டும்.

ஓ! எனதருமை ஈழத்தமிழ் இளைஞர்களே! பொருளாதாரம் என்பது அவசியமானது என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. அதற்காக வெளிநாட்டு வாழ்வு ஒன்றுதான் எங்கள் பொருளாதார பலத்திற்கான ஒரேவழி என்று நினைப்பது மகா தவறு.

தமிழ் இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டால் இலங்காபுரியில் ஈழத்தமிழ் இனத்தின் இதயத்துடிப்பு மெல்லமெல்ல குறைந்துவிடும் என்று யாரேனும் நினைத்திருக்கலாம்.

அதற்காக சில திட்டங்களை அவர்கள் வகுத்திருக்கலாம். அவற்றுக்கு நாம் இசைவோமாக இருந்தால், முப்பது வருடகால ஆயுதப் போராட்டம் அதற்குமுன்பான அகிம்சை வழி போராட்டங்கள், இப்போதும் நம்பிக்கையோடு நடந்தேறும் நமது வாக்களிப்புகள், பேச்சுவார்த்தை முயற்சிகள், வெளிநாடுகளின் தலையீடு வேண்டும் என்ற கோரிக்கைகள், எங்கள் உயிரினும் மேலான பழ.நெடுமாறனின் தன்னலமற்ற போராட்டங்கள், சகோதரன் சீமானின் சிறை அனுபவிப்புகள் என அத்தனையும் வீணாகிப் போய்விடும் அல்லவா?

எனவே என் அன்பு சகோதரர்களே! நீங்கள் கப்பல் ஏறும் முன் உங்கள் தாய் மண்ணை ஒரு கணம் நினையுங்கள். உண்மை புலப்படும்.

# கிளிநொச்சி மரக்கறிச் சந்தையில் கட்டாக்காலிகளின் தொல்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மரக்கறிச் சந்தையினுள் இரவுவேளைகளில் கட்டாக்காலி மாடுகள் புகுந்து மரக்கறி வகைகளை உண்பதுடன் சேதப்படுத்தியும் வருவதாக சந்தை வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி சந்தைத்தொகுதியானது கிளிநொச்சி பிரதேசசபைக்கு சொந்தமானது.

இச்சந்தைத்தொகுதியினுள் கடந்த 6ஆம், 7ஆம் திகதிகளில் இரவுவேளையில் உட்புகுந்த கட்டாக்காலி மாடுகள் சுமார் 13ஆயிரம் ரூபாய் பெறுமதியான மரக்கறி வகைகளை சேதப்படுத்தியுள்ளதாகவும் இதுபோன்ற செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெறுவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சந்தை வளாகத்தினைச் சூழ பாதுகாப்பு வேலிகள் இல்லாமையே இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற பிரதான காரணங்களாகும்.

இவற்றிற்கான பாதுகாப்பு வேலிகள் சுற்றிவர அமைக்கப்பட்டுள்ளபோதும் அவ்வேலிகளில் இடையிடையே பாதுகாப்பற்ற கடவைகள் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படுவதால் தாம் கம்பிவலையினாலேயே தமக்கு ஒதுக்கப்பட்ட வியாபாரம் செய்யும் இடத்தை சுற்றிவர அடைத்துப்பாதுகாப்பாக வைத்திருக்கின்ற போதும் இச்செயற்பாடு நடைபெறுகின்றது.

பிரதேச சபையினால் இதற்காக இரு இரவு நேர காவலாளிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையிலும் இச்சம்பவங்கள் நடைபெறுகின்றன.

இவை தொடர்பாக பலதடவைகள் பிரதேசசபைக்கு அறிவித்துள்ளபோதும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளையும் அவர்கள் எடுக்கவில்லை எனவும் ஆனால் தமக்குரிய நிலவாடகை, வரிச்சலுகைகளை காலந்தாழ்த்தாமல் பிரதேசசபை பெற்றுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

மீளக்குடியமர்ந்து இவ்வியாபாரத்தின் மூலம் ஜீவனோபாயம் நடத்துகின்ற எமக்கு பாதுகாப்பாக வியாபாரங்களைச் செய்வதற்கும் பொருட்களை பாதுகாப்பாக வைத்து விட்டுச் செல்வதற்கும் உரிய நடவடிக்கைகளைச் செய்து தருமாறு உரியவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9)

# ஏசிசிஏ நிறுவனத்தின் வழிகாட்டல் கருத்தரங்கு


(யாழ்ப்பாணம்)

ACCA (Association of Chartered Certified Accounts -U.K) நிறுவனம் தனது அங்கீகரிக்கப்பட்ட வடக்கின் ஒரேயொரு கல்வி வழங்குநரான K-AIMS உடன் இணைந்து நடத்தும் உயர்தரப்பரீட்சைக்கு பின்னரான வாழ்க்கை வழிகாட்டல் கருத்தரங்கு 2012 எதிர்வரும் செப்டெம்பர் 12ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிமுதல் மாலை 4 மணி வரை யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடப் பீடாதிபதி தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழக தெரிவு என்பது மட்டுப்படுத்தப்பட்டதுடன் இன்றைய நவீன உலகில் தொழில்வாய்ப்பை பெறுவதற்கு பட்டப்படிப்பு மாத்திரமல்லாது தொழில்சார் கல்வியும் (Professional Qualifications) இன்றியமையாத ஒன்றாக அமைந்துள்ளது.

இது தொடர்பான விடயங்கள் பேராசிரியர் வேல்நம்பி மற்றும் ACCA பிரதி நிதிகளினாலும் கலந்துரையாடப்படவுள்ளது. அத்தருணம் தங்கள் பாடசாலையின் உயர்தர மாணவர்களின் பங்களிப்பு அவர்களின் எதிர்கால வாழ்க்கையை திட்டமிட உதவிபுரியும். (அ-2)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை
## எங்கள் வளநாடு



அன்பர் பணிந்தேத்தி நிற்கும் நாடெங்கள் நாடே
அரனுறைதற் கிடமான நாடெங்கள் நாடே
துன்பக்களை போக்கிநிற்கும் நாடெங்கள் நாடே
தூயவருள் மழைபொழியும் நாடெங்கள் நாடே
இன்பப்பயிர் ஓங்கிவளர் நாடெங்கள் நாடே
இந்திரியக் கள்வரற்ற நாடெங்கள் நாடே
என்புநனி நெக்குருக என்னைவலிந்தாண்ட
என்குரவன் காட்டிவைத்த தெங்கள்வள நாடே

# தன்னைத்தேடி வந்த நோயாளர்களை பல வழிமுறைகளில் குணமாக்கிய இயேசு

இயேசு தன்னைத்தேடிவந்த நோயாளர்களைப் பல்வேறு வழிமுறைகளில் குணமாக்கியுள்ளார். சிலரைத் தொலைவிலிருந்தே குணமாக்கினார். சிலரைத் தொட்டுக்குணமாக்கினார். சிலரைத் தொடாமல் *உம் நம்பிக்கை உம்மைக் குணமாக்கிற்று* என்று சொல்லிக் குண்மாக்கினார்.

ஆனால் இன்றைய நற்செய்தி வாசகத்தில் நாம் பார்க்கும் காது கேளாத, திக்கிப்பேசும் மனிதரை இயேசு குணப்

## பரமபிதா காட்டிய பாதை

படுத்திய முறை வித்தியாசமானது. இயேசு அவரைக் கூட்டத்திலிருந்து தனியே அழைத்துச் சென்று தம் விரல்களை அவர் காதுகளில் இட்டு, உமிழ் நீரால் அவர் நாவைத்தொட்டு, பின்பு வானத்தை அண்ணார்ந்து பார்த்து, பெருமூச்சுவிட்டு, அவரை நோக்கி, *எப்பத்தா* அதாவது *திறக்கப்படு* என்றார். உடனே அவருடைய காதுகள் திறக்கப்பட்டன. நாவும் கட்டவிழ்ந்தது. அவர் தெளிவாகப் பேசினார். இந்த மனிதரைக்குணமாக்க இயேசு கூடுதல் கவனம் எடுத்துக்கொள்கிறார் எனக் கருதலாம்.

செவிடர்களும் வாய்பேச முடியாதவர்களும் நம்மிடையே இல்லையா? இன்று நாம் வாழும் சூழலில் பல பாழ்பட்ட விடயங்கள் நடந்தாலும் யாரும் தட்டிக்கேட்க முன்வருவதில்லையே. ஏன் யாருக்கும் காது கேட்கவில்லையா? அல்லது எல்லோருமே ஊமைகளா? எனும் கேள்விக்கு விடைகளைத் தேடி அலைகின்றனர்.

நாம் நம் காதுகளைத் திறந்தால், நம் வாயைத் திறந்தால், வாய் பொத்தி, காதுகளைப் பொத்தி வாழும்எத்தனையோ குரல் இழந்த அடித்தள மக்களுக்கு குரலும் வாழ்வும் கொடுத்த இயேசுவைப் போல் புதிய மனிதர்களாக மாறுவோம். எங்களைப் பார்த்து இவர் எத்துணை நன்றாக யாவற்றையும் செய்து வருகிறார்.

இயேசு ஆற்றிய புதுமைகள் அக்கால மக்களுக்கு மட்டுமல்ல, நமக்கும் ஒரு நல்ல செய்தியைத் தருகின்றன.

அவற்றை நன்குணர்ந்து வாழ்வாக்கினால் நம் காதுகள் திறக்கப்பட்டு, நாவு கட்டவிழும் அதிசய செயல்களை நம் வழியாக இயேசு செய்வார். தன் பணி வாழ்வில் இயேசு புரட்சிகரமாகப் பேச வேண்டும். அதனால் மக்களை தன் வயப்படுத்த வேண்டும் என்று முயன்றதில்லை.

இயேசு வாய்பேசாத, காது கேளாத ஒருவனை குணமாக்கிய புதுமையை, தன் வல்லமையை வெளிப்படுத்த அவர் எடுத்துக்கொண்ட முயற்சியாகப் பார்க்காமல், இன்று நமக்கும் காட்டும் ஒரு மாற்றுப் பாதையாகப் பார்க்க வேண்டும். இயேசு அவரைக்கூட்டத்திலிருந்து தனியே அழைத்துச் சென்று, தம் விரல்களை அவர் காதுகளில் இட்டுக் குணமாக்கினார்.

இயேசுவின் இந்தச் செயல்களில் இருந்து ஒருசில பாடங்கள். இயேசு அவர் காதுகளில் கையை வைக்கும் போது அவரிடம் இயேசு சொல்லாமல் சொல்லியது *உன்னை இதுவரை அல்லது இனியும் மனம் தளரச் செய்யும் வண்ணம் இந்த உலகம் சொல்வதைக் கேளாதே. உன் காதையும் நாவையும் நல்ல செய்திகளுக்காகத் திறந்து விடு. வேதனையில், விரக்தியில், நீ வாழ்ந்தது போதும். உன் சிறைகளைத் திறந்து வெளியே வா. உன் சிறைகள் திறக்கப்படுக* எனக் கூறிவிடலாம். எனவே, நாமும் தீமைகளைப் பார்க்காதே, கேட்காதே, சொல்லாதே என்று மூன்று குரங்குகள் வழியாக நமது காந்தி கற்றுத் தந்த பாடத்தை வாழ்வாக்குவோம்.



இயேசுவிடம் குறையுள்ள அந்த மனிதனை மற்றவர்கள் கொண்டு வந்தனர். அந்த மனிதன் தானாக இயேசுவிடம் வரவில்லை. அவனுடைய ஒரு சில நண்பர்கள் அவனுக்கு நல்லது நடக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இயேசுவிடம் அவனைக்கொண்டு வந்தனர். இப்படிப்பட்ட நல்ல உள்ளங்களாக நாம் இன்று மாறுவோம். இயேசுவைப் போல் நாமும் எம் செவிகளையும் நாவையும் எல்லாப் புலன்களையும் தொட்டு இதே வார்த்தைகளைச் சொல்வோம். நல்லவைகளை பார்ப்போம், நல்லவைகளைப் பேசுவோம், நல்லவைகளைக் கேட்போம், கனல் கக்கும் எம் மணல் பரப்பு நீர்த்தடாகமாக்குவோம்.

**ம.பிரான்சிஸ்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கற்கோவளம் உதயதாரகை வி.க. இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும்

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழக தலைவர் இ. பரமதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம பிருந்தினராக பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக் கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக ஜே/406 கற்கோவளம் கிராம சேவகர் எஸ். கௌதமன், யா/தேவரையாளி அதிபரும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் உபதலைவருமான மா. நவநீதமணி, யா/ கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை அதிபர் பொ.அரவிந்தன், பருத்தித்துறை பொலிஸ் அதிகாரி ஜெகத் அபெயகோன், கற்கோவளம் இராணுவ அதிகாரி எஸ்.சரத்பிரேமதிலக, ஓய்வு பெற்ற பட்டயக் கணக்காளரும் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவாஸ்தான தலைவருமான அ.அன்னலிங்கம், பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவ ரும் ஈ.பி.டி.பி. கட்சியின் வட மராட்சி அமைப் பாளருமான ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக கற்கோவளம் ஐஸ் தொழிற் சாலை இயக்குநர் திருநாவுக் கரசு சேந்தன் கலந்து சிறப்பிக் கவுள்ளார். (3)

# மனோகரா அணி வெற்றி



பருத்தித்துறை உதைப்ந் தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற் சாலை ஆதரவில் கற்கோவளம் உதயதார்ரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தா ட்டச் சுற்றுப் போட்டியில் பருத்தி த்துறை லீக்கிற்கு உட்பட்ட கழ கங்கள் மோதின. இப்போட்டிகள் யாவும் கற்கோவளம் உதயதா ரகை விளையாட்டுக்கழக மைதா னத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் வெள் ளிக்கிழமை நடைபெற்ற அரை யிறுதிப் போட்டியில் மனோகரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்பீற்றேர்ஸ் விளை யாட்டுக்கழகம் மோதியது.

இதில் 5:2 என்ற கோல்கணக்கில் மனோகரா விளையா ட்டுக்கழகம் வெற்றி பெற்று இன்றையதினம் நடைபெறும் இறுதியாட்டத்தில் டயமன்ஸ் அணியுடன் மோதவுள்ளது.(3)

# மன்னார் பிறிமியர்லீக் கிரிக்கெட் போட்டி: கிளிநொச்சி, கிறீன்பீல்ட் அணிகள் வெற்றி

மன்னார் பெரியகடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக் கழகத்தி னால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படும்10 ஓவர்கள் கொண்ட மன்னார் பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி அண்மையில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது. 36 போட்டிகளைக் கொண்ட ஆடு லீக் சுற்றின் முதலாவது போட்டியானது கிறீன் பீல்ட் அணிக்கும் ஏசியன் அணிக்கும் இடையில் நடைபெற்றது.


இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிறீன் பீல்ட் அணியி னர் நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்களின் 07 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜக்சன் 25 பந்துகளில் 40 ஓட்டங்களையும் பந்துவீச்சில் ஏசியன் அணிசார்பாக பிரதீப், சுமன், செந்தில் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர்.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஏசியன் அணியினர் 10 ஓவர் களில் 06 இலக்குகளை இழந்து 73 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 36 ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியடைந்தனர்.

இதில் ஏசியன் அணிசார்பாக துடுப்பாட்டத்தில் பிரதீப் 07 பந்துகளில் 14 ஓட்டங்களையும் கிறீன் பீல்ட் அணிசார்பாக பந்து வீச்சில் 07 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளைக் கைப்பற்றினார். நடைபெற்ற இரண்டாவது போட்டியில் கிளிநொச்சி அணியும் நடப்பு சம்பியன் சென். விக்டறிஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெ டுத்தாடிய கிளிநொச்சி மாவட்ட அணியினர் 10 ஓவர்களில் 03 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களை குவித்தனர். துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி அணிசார்பாக றேகன் 30 பந்துகளில் 55 ஓட்டங்களையும் பந்துவீச்சில் சென். விக்ட ரிஸ் அணிசார்பாக விவேக், ஆனந்த், செல்வராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். விக்டரிஸ் அணி யினர் இறுதிவரைபோராடி 10 ஓவர்களில் 07 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 09 ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியடைந்தனர். துடுப்பாட்டத்தில் சென்.விக்டரிஸ் அணிசார்பாக 16 பந்துகளில் 23 ஓட்டங்க ளையும் பந்து வீச்சில் கிளிநொச்சி அணி சார்பாக ரவிக்கு மார் இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினார்.




முரளி நல்லிணக்க வெற்றிக்கிண்ண இருபது-இரு பது கிரிக்கெட் போட்டி நேற்று யாழ்ப்பாணம் சென் பற் றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது

இக் கிரிக்கெட் போட்டிக்கு இலங்கை அணியின் உபதலைவர் அஜசலோ மத்தி யூஸ், இலங்கையின் வேகப் பந்துவீச்சாளர் லசித் மலிங்க, இளைய நட்சத்திர வீரர் டினேஸ் சந்திமால், வேகப்பந்து வீச்சாளர் நுவான் குலசேகரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் வீரர்கள் அறிமுகம் செய்யப்படுவதையும் வீரர்களுக்கு பயிற்சி வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.ராஜேஸ்கரன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மண்டைதீவு வேப்பந்திடலில் இன்று பொதுக்கூட்டம்

(மண்டைதீவு)


மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆலய முன்றலில் சபைத் தலைவர் கு.க.நடராஜா தலைமையில் இடம்பெறும்.

இப்பொதுக் கூட்டத்தில் மண்டைதீவு சைவப் பொதுமக்களை தவறாது கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையின் செயலாளர் அ.ஸ்ரீபத்மராசா கேட்டுள்ளார். (ந)

# சுப்பர் ஓவரில் பாகிஸ்தான் வெற்றி

ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான 2ஆவது இருபது-20 போட்டி சுப்பர் ஓவர் முறையில் தீர்மானிக்கப்பட்டது.

அதன் போது பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றுக் கொண்டது. இரு அணிகளும் 151 ஓட்டங்களையே பெற்றதாலேயே சுப்பர் ஓவர் நடைமுறை பின்பற்றப்பட்டது. டுபாய் சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.



இதன்படி துடுப்பெடுத்தாட களமிறங்கிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 151 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. 20 ஓவர்களில் 152 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றதால் ஓட்டங்கள் சமநிலையில் காணப்பட்டன. இறுதி ஓவரில் 10 ஓட்டங்கள் பெறப்பட வேண்டி இருந்ததோடு இறுதி 2 பந்துகளில் 7 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 5ஆவது பந்தில் ஆறு ஓட்டமொன்று அடிக்கப்பட இறுதிப் பந்தில் ஓர் ஓட்டம் தேவைப்பட்டது. ஆனால் பற்கமின்ஸ் ஆட்டமிழந்திருந்தார்.

இதன் அடிப்படையில் சுப்பர் ஓவர் தீர்மானிக்கப்பட்டது. சுப்பர் ஓவரில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 11 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள பாகிஸ்தான் அணி இறுதிப் பந்தில் அந்த ஓட்ட எண்ணிக்கையைக் கடந்தது. போட்டியின் நாயகனாக பாகிஸ்தான் அணியின் சயீட் அஜ்மல் தெரிவானார்.

## கிழக்கு மாகாண சபைத் ...

நேற்றைய தேர்தலானது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலாக அமையவில்லை என்று தெரிவித்துள்ள கபே அமைப்பு, மூன்று மாவட்டங்களிலும் சுமார் 45 சதவீத வாக்களிப்பே இடம்பெற்றுள்ளது என குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 121 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அக்கரைப்பற்றில் பாரியளவிலான வன்முறைச்சம்பவங்கள் பதிவாகியுள்ள தாகவும் அவ் அமைப்பு மேலும் கூறியுள்ளது.

கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலை பகிஷ்கரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத் தேர்தலில் போட்டியிட்டதால் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவு பலராலும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளி கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு எதிராகவும் வடமத்திய மாகாண சபைத் தேர்தலில் கூட்டாகவும் போட்டியிடுகின்றது.

மற்றுமொரு பங்காளிக் கட்சியான விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி திருமலை மாவட்டத்தில் தனியாக போட்டியிடுகிறது.

சப்ரகமுவ மாகாணத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றுவதற்காக மலையகக் கட்சிகளான இ.தொ.கா., ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி உட்பட மலையக அரசியல் கட்சிகள் சில இணைந்து ஒரே சின்னத்தில் போட்டியிடுவதும் இத்தேர்தலில் குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

இறுதியாக நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல் முடிபுகளின் படி மட்டக்களப்பு, அம்ப்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாண சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 20 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 15 ஆசனங்களையும், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ் ஜனநாயக தேசிய முன்னணி ஆகிய கட்சிகள் தலா ஒரு ஆசனத்தையும் பெற்றிருந்தன.

இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களை உள்ளடக்கிய சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 25, ஐக்கிய தேசியக் கட்சி 17, மக்கள் விடுதலை முன்னணி 2 என்ற எண்ணிக்கையில் ஆசனங்களைப் பெற்றிருந்தன.

பொலநறுவை மற்றும் அநுராதபுர மாவட்டங்களைக் கொண்ட வட மத்திய மாகாண சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 20, ஐக்கிய தேசியக்கட்சி 12 மக்கள் விடுதலை முன்னணி 1 என ஆசனங்களை பெற்றிருந்தன. (எ-11)

## ஜனாதிபதி ...

வரப்பிரசாரம் காணப்படுவதனால் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது எனவும் இதனால் இந்த மனுவை தள்ளுபடி செய்வதாகவும் நீதவான் நயோமி புச்வால்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் தொடரப்படும் சிவில் வழக்குகளின் போது நாடுகளின் தலைவர்களுக்கு ராஜதந்திர வரப்பிரசாரம் வழக்கப்பட்டு வருவதாகவும், இது நீண்டகாலமாக பின்பற்றப்படும் ஓர் நடைமுறை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதமும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவொன்றை அமெரிக்க நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஆயுதங்களுடன் ...

குழுவினருடன் பல பகுதிகளில் வலம் வந்ததாகவும் மனிதவுரிமைகளை பாதுகாப்பதற்கான புத்திஜீவிகள் ஒன்றியம் தெரிவித்தது.

சட்டவிரோதமான இச் செயற்பாடு தொடர்பாக தேர்தல் கடமைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன மற்றும் தேர்தல் ஆணையாளர் ஆகியோருக்கு சம்பவம் தொடர்பாக தெரியப்படுத்தியதாக ஒன்றியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் உதித்த குணரத்ன தெரிவித்தார். (எ-11)


யாழ் நகரில்
உயர்தர பரீட்சைக்கு பின்னரான வாழ்க்கை வழிகாட்டி
இலவச கருத்தரங்கு
(யாருக்கு: உயர்தர மாணவர்களுக்கும் பெற்றோருக்கும்)
இடம்: யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம்: 12-09-2012
நேரம்: 30நிமிட கற்கைநெறி அறிமுகம்
மு.ப.10.30 முதல் பி.ப 5.00 வரை நடைபெறும்
ACCA + UK Degree
Association of Chartered Certified Accountants-UK
BSc(Hons) in Applied Accounting (Oxford Brookes University) UK
@ K-AIMS
ALP STUDENT TUITION GOLD 1/4/2012-31/3/2013 ACCA
We Make You Progress Everyday..
077 2 555 814
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
No. 35-1/1, Upatissa Road, Colombo 4
(அ-1009)



இப்பொழுது யாழ் நகரில் சகலருக்குமான
தொழில்சார், கணனி, முகாமைத்துவ, ஆங்கில கற்கைநெறிகள்

Job Oriented Courses | Total Professional Education

Computing & IT
- International Diploma in Computer Studies
- Certificate in Web Design, Graphics Design / Digital Design / Multimedia & Animation
- Certificate in PC Hardware Technology and Networking
- Special IT studies for school students
- ICDL

ICDL International Computer Driving Licence

English
TOIEC
- Spoken English / International Communication
- International Diploma in English (A1, B1, B2, C1 levels)
- English for work
- IELTS

TOIEC பரீட்சைகள் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றன

- Certificate in Tourism & Hospitality
- Diploma in Hotel Management
- Advanced Diploma in Tourism Management
- Diploma in Hospitality & Tourism Management

CTH Confederation of Tourism & Hospitality

Accounting & Finance
- Diploma in Accounting & Financial Management
- Diploma in Business Management

விசேட தொழில்சார் கற்கை
- Diploma in Secretarial Studies

Modern 2D, 3D Lab வசதிகள் | சிறந்த விரிவுரையாளர் குழு
அச்சடித்த பாடக்குறிப்புக்கள் | Industrial Training வாய்ப்புக்கள்

மேலதிக தகவல்கள் : 0777172660
International Knowledge Pool
No.19, 3rd Floor,(People's Bank) Thanarajah Building, Stanely Road, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியாகிய பெறுபேறுகளின்படி...

நடந்து முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால் மூல வாக்குகளின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னிலையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தபால் மூல வாக்களிப்பு விபரங்களின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 3 ஆயிரத்து 240 வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆயிரத்து 448, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 463 வாக்குகளை யும், சுயேட்சைக்குழு 8 -170 வாக்குகளையும் பெற்றுள்ளன.

இதேவேளை பொலநறுவையில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது.

,வட மத்திய மாகாணம் பொலநறுவை மாவட்ட தபால் மூல தேர்தல் முடிபுகள் வெளியாகியுள்ளன.

அதன் பிரகாரம் கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை:

ஐ.ம.சு.கூ.-4532, ஐ.தே.கட்சி-2835, மக்கள் விடுதலை முன்னணி-254,

சப்பிரகமுவ மாகாணம் இரத்திரனபுரி மாவட்ட தபால் மூல தேர்தல் முடிபுகள் வெளியாகியுள்ளன.

அதன்பிரகாரம் கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை:

ஐ.ம.சு.கூ.-6549, ஐ.தே.க.-2245, ம.வி.மு.-298

இதேவேளை,திருகோணமலை மாவட்டத்தில் முதல்கொண்டு கிடைத்த தேர்தல் பெறுபேறுகளின் அடிப்படையில் 6 தொகுதிகளில் 5 தொகுதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

திருகோணமலை புல்மோட்டை தேர்தல் தொகுதியில் முஸ்லிம் காங்கிரஸ்-3227, த.தே.கூ.-1559,

பெரிய கடைத் தேர்தல் தொகுதி

த.தே.கூ.-4359,மு.கா.-550, ஐ.தே.க-283, ஐ.ம.சு.கூ.-268,

நிலாவெளி

த.தே.கூ.-2471, மு.கா.-1662, ஐ.ம.சு.கூ-667, ஐ.தே.க.-197,

திருகோணமலை நகரம்-1

த.தே.கூ.4950, ஐ.ம.சு.கூ.286, மு.கா.-100,ஐ.தே.க.-71.

திருகோணமலை நகரம்-2

த.தே.கூ.-4668, ஐ.ம.சு.கூ.348, ஐ.தே.க.61, மு.கா-14.

மூதூர் தேர்தல் தொகுதி

த.தே.கூ.4049,ஐ.ம.சு.கூ.458, மு.கா.300,ஐ.தே.க.81.

இவையே இன்று அதிகாலை 2 மணி வரை கிடைத்த தேர்தல் முடிபுகளாகும்.(எ-11)


## விற்பனைக்கு

Viedo Camera Sony 2100C

D90 Nikon

D80 Nikon

D200 Nikon

வீடியோ கமரா, ஸ்ரான், புரோலைட் பைக்கிறேன் கேட்டின் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

Tel :- 0757932877, 0773450036

(383)



பெற்றோர்கள், மாணவர்களுக்கு . . . .

உயர் தர பரிட்சைக்கு பின்னரான வாழ்க்கை வழிகாட்டி கருத்தரங்கு 2012

ACCA[Association of Chartered Certified Accountants (UK)]

நிறுவனம் தனது அங்கீகரிக்கப்பட்ட வடக்கின் ஒரேயொரு கல்வி வழங்குனரான K-AIMS உடன் இணைந்து நடாத்தும் உயர்தர பரிட்சைக்கு பின்னரான வாழ்க்கை வழிகாட்டி கருத்தரங்கு 2012

பிரதம விருந்தினர் :T . VELNAMBY அவர்கள்

[பீடாதிபதி - முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடம் யாழ் பல்கலைகழகம்]

திகதி : செப்டம்பர் மாதம் 12 ம் திகதி புதன்கிழமை

நேரம் : காலை 10 .30 மணிக்கு

இடம் : யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்

இலங்கையை பொறுத்தவரையில் பல்கலைக்கழக தெரிவு என்பது மட்டுப்படுத்தப்பட்டதுடன் இன்றைய நவீன உலகில் தொழில் வாய்ப்பை பெறுவதற்கு பட்டப்படிப்பு மாத்திரமல்லாது , தொழில் சார் கல்வியும் [Professional Qualification] இன்றிஅமையாத ஒன்றாக அமைந்துள்ளது. இது சம்பந்தமான விடயங்கள் பேராசிரியர் வேல்நம்பி அவர்களாலும் ACCA பிரதிநிதிகளினாலும் கலந்துரையாடப்படவுள்ளது. அத்தருணம் உயர்தர மாணவர்களின் பங்களிப்பு அவர்களின் எதிர்கால வாழ்க்கையை திட்டமிட உதவிபுரியும். இந்நிகழ்விற்கு மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் பெற்றோர்களை அழைக்கின்றோம்.

நன்றி

K-AIMS

We Make You Progress Everyday..

NO : 3 , 2/1 , Sirambiyadi Lane
Jaffna
TP : 0772 555 814
E-Mail : kumanan@k-aims.com

(சி-1002)



# Gnanams Hotel Pvt (Ltd.)

முற்றிலும் மாறுபட்ட

இந்திய சுற்றுலா ஒன்றிற்கு நீங்கள் தயாரா?

தென்னிந்திய

பாரம்பரிய நகரங்கள் - ரூ.34,500.00

கேரளா - ரூ. 48,900.00

(ஐந்து நாட்களுக்கான உணவு, தங்குமிடம் போக்குவரத்து, விமானப் பயணச்சீட்டு)



விபரங்களுக்கு

ஞானம்ஸ் ஹோட்டல்

299, 301, Clock Tower Road, Jaffna

TP : 077 3172449

E-Mail : gnanamshotel@gmail.com

WWW.gnanamshotel.webs.com

(சி-1001)



பழைய பட்டுப்புடவை பணமாகிறது!

ஸ்ரீ காஞ்சிபுரம் பட்டு சென்ரர்

# யாழ்ப்பாணம்

தியாகி அறக்கொடை நிறுவன வளாகம் T.C.T வணிக வளாகம்.

527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

வாகன தரிப்பிட வசதியும் உண்டு

தொ.பே:-0752145355

10 தினங்கள் மட்டுமே!

(373)

10.09.2012 முதல் 22.09.2012 வரை



பழைய (கிழிந்த) பட்டுப்புடவைகள், பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள், பழைய கிழிந்த கூறைப் புடவைகளும், எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக்கொண்டு உடனே பணம் தரப்படும்.

பழைய டிஸ்யூ புடவைகள் ரூபா 5000/- க்கு மேல் ரூபா 20000/- வரை வழங்கப்படும்

பழைய காலத்து கல்வைத்த நகைகள், லால்குடி, ஜடபில்லை, பவளம், பவள மாலைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்

குறிப்பு :- எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது

இந்த விளம்பரத்தைக் கொண்டு வந்து பட்டுப் புடவை கொடுத்தால் வெள்ளிக் கொலுசு (30Tch) ஒன்று இலவசம்

வேலை நேரம் காலை 9.30 மணிமுதல் இரவு 6.30 மணிவரை - ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.